# புதிய உடன்படிக்கை

## போதகர். ஆஸ்வின் ஜேம்ஸ்டட்

*February 2020*

அக்கினி ரதங்கள்

ETERNAL LIGHT AG
*let your light shine*

# அக்கினி ரதங்கள்

# புதிய உடன்படிக்கை

**Ps.*ஆஸ்வின் ஜேம்ஸ்டட்***

## முகவுரை:

இந்த புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள செய்திகள் நம்முடைய போதகர் ஆஸ்வின் ஜேம்ஸ்டட்டால் நம் சபையில் புதன் கிழமை மற்றும் சனிக்கிழமை இரவு நடைபெறும் வேதாகம பயிற்சி வகுப்பில் பிரசங்கிக்கப்பட்ட வார்த்தைகள்.

நாங்கள் இந்த புத்தகத்தை மிகுந்த ஜெபத்தோடும் பிரயாசத்தோடும் உங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தையும், வல்லமையையும் அறிந்துகொண்டு, இருள் நிறைந்த இந்த உலகத்தை வென்று தேவனால் உங்களுக்கான தேவ சித்தத்தை அடைய உருவாக்கியுள்ளோம்.

# உள்ளடக்கம்


*ஆத்தும இரட்சிப்பா? அல்லது ஆவியின் இரட்சிப்பா?* 1

*புதிய உடன்படிக்கை-1 ஒப்புரவாக்குதலின் ஊழியம்* 7

*புதிய உடன்படிக்கை-2 எவர்களுடைய பாவம் மூடப்பட்டதோ அவர்கள் பாக்கியவான்கள்* 21

*புதிய உடன்படிக்கை-3 நமது நீதி அல்ல தேவ நீதியே.* 31

*தேவ ஆவியால் வழிநடத்தப்படுவோம்* 36

*உயிர்பிக்கும் சாட்சிகள்* 47

# *ஆத்தும இரட்சிப்பா? அல்லது ஆவியின் இரட்சிப்பா?*

ஆத்துமாவைக் குறித்து உங்கள் கருத்து என்ன? அதைக் குறித்துப் பார்க்கலாம், நம்முடைய சிந்திக்கும் திறன், நம்முடைய உணர்ச்சி, நம்முடைய சுயசித்தம். இந்த மூன்றும் சேர்ந்தது தான் ஆத்துமா.

ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன். விசுவாசத்தினாலே தேவனோடு நடந்தார். விசுவாசித்து பெரிய காரியங்களை செய்தார் என்று படிக்கிறோம். புதிய ஏற்பாட்டிலும் **"விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்துவது கூடாத காரியம்"**. என்று வேதத்தில் வாசிக்கிறோம். விசுவாசம் ஆத்துமாவுக்குரியது. விசுவாசம் என்பது நம்முடைய சிந்திக்கும் திறன், நம்முடைய உணர்ச்சி, நம்முடைய சுயசித்தம் இந்த மூன்றிலும் கடந்து வருகிற ஒரு அனுபவம்.

முதலாவது அனுபவம் **"கர்த்தர் என்னை சுகமாக்க முடியும். அவருடைய தழும்புகளால் நான் குணமானேன். நான் பெலவீனமாய் இருக்க மாட்டேன்"** என்று நம்ப ஆரம்பிக்க வேண்டும். நாம் நம்பினாலும் நம்முடைய சித்தம் என்னும் திறன், சும்மாயிருக்காது. நாம் இதை நம்புவோம், ஆனால் வேறொன்றை செய்வோம்.

இரண்டாவது அனுபவம், பழைய ஏற்பாட்டிலே எதிரிகள் வரும்போது கர்த்தர் கூட இருக்கிறார் என நம்புவார்கள். அதே சமயம் பக்கத்து நாட்டு இராஜாவிடம் சென்று, நான் உனக்கு கப்பம் கட்டுகிறேன் என்கூட யுத்தத்திற்கு வா என்று சொல்வார்கள். உடனே தேவன் தீர்க்கதரிசியை அனுப்பி அந்த இராஜாவை கடிந்து கொள்கிறார். இல்லையென்றால் நீ அழிந்து போவாய் என்று சொல்லி சபித்து விடுகிறார். காரணம், அவர்கள் தேவனை நம்புகிறார்கள். ஆனால், அவர்களுடைய சுயசித்தம் அடங்கியிருக்கவில்லை.

மூன்றாவது அனுபவம், நம்புகிறேன் என்னுடைய சுய சித்தமும் இருக்கிறது. ஆனால் உணர்ச்சி அடங்காது. உணர்ச்சி தாறுமாறாக ஓடும். இதை நாம் கோலியாத்தின் கதையிலே படிக்கிறோம். ராஜா தேவனை நம்பினான், சித்தமும் இருந்தது, பக்கத்து நாட்டு ராஜாவிடம் உதவிக்குச் செல்லவில்லை. தேவன்

உதவி செய்வார் என்று சவுலும் ஜனங்களும் நம்பினார்கள். ஆனால், கோலியாத்தைக் கண்டு பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

பேதுரு கடலில் நடக்கும் போதுகூட கர்த்தரின் வார்த்தையை நம்பினான். அவனுடைய சித்தம் கிரியை செய்கிறது, அவன் படவைவிட்டு இறங்கினான். உணர்ச்சிகூட ஆரம்பத்தில் நம்பினது, அதனால்தான் அவன் நடந்தான், அதனால்தான் அற்புதம் நடந்தது. அவன் நடக்கிற ஒவ்வொரு அடியும் அற்புதம். சித்தம், உணர்ச்சி, நம்பிக்கை இந்த மூன்றிலும் ஏதோ ஒன்றை தொந்தரவு பண்ணினான் பிசாசு. பேதுரு மூழ்கினான். காற்றையும் கடலையும் ஊதிவிட்டான் பிசாசு. அதை கண்டவுடனே, உணர்ச்சியிலே பயம் வந்தது. உணர்ச்சி ஒத்துப் போகாதவுடனே அவன் மூழ்கினான். விசுவாசத்தை மூன்றாகப் பிரித்துப் பார்க்கிறோம். உங்களுடைய சிந்திக்கும் திறன், உங்களுடைய சுயசித்தம், உங்களுடைய உணர்ச்சி மூன்றும் சேர்ந்தது தான் விசுவாசம். இது தான் ஆத்துமா. எனவே விசுவாசம் ஆத்துமாவை நிரப்ப வேண்டும்.

**3 யோவான் 1:2**

**பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.**

இதினால் வாரவாரம் உங்களை மூளைசலவை செய்து நம்ப வைக்கிறேன். ஏனென்றால், உங்களுடைய மனமும், உணர்ச்சியும், சுயசித்தமும் "**வாழ்ந்திருப்பேன்! சுகமாயிருப்பேன்!**" என்பதை நம்ப ஆரம்பிக்க வேண்டும். உங்களுடைய ஆத்துமா செழிப்பதற்கு முன்பாக இது நடக்கிறது.

கடந்த மாதம் மனதளவிலே உபவாசத்தைக் குறித்துப் பேசினேன். நீங்கள் இதுவரை கற்றுக் கொண்டதை, இதுவரைக்கும் அனுபவித்ததை மறந்து, புதிதாக அனுபவிக்க, கற்றுக்கொள்ள ஆரம்பிக்க வேண்டும். கடந்த வருடங்கள், தோல்விக்குரியதாக, குழப்பத்திற்குரியதாக நீங்கள் என்னவெல்லாம் படித்தீர்களோ, அதையெல்லாவற்றையும் நீக்கிவிட்டு, புதிதாக படிக்க ஆரம்பிக்க வேண்டும்.

ஆதியிலே தேவன் மனிதனை உண்டாக்கும் போது, அவனுக்கு சுயசித்தத்தைக் கொடுத்தார். சித்தத்திற்கு விடுதலையைக் கொடுத்தார். அவன் நினைத்ததை செய்யலாம். கணினிக்கு சுயசித்தம்

கிடையாது. அப்படி சுயசித்தம் கிடைத்தால், அது சில சமயம் நன்மையாகத் தோன்றினாலும், பல சமயம் ஆபத்தானதாக முடியும்.

சுயசித்தமுள்ள கணினி வருவதற்கு முன்பாக தேவன் நம்மை எடுத்துக் கொள்வார் என்பது என் நம்பிக்கை. சுயசித்தத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இந்த சுயசித்தம், முக்கியமானது, ஆபத்தானது. தேவன் தம்முடைய சித்தத்தை நம்மூலமாய் நிறைவேற்றும்படி, நமக்கு சுயசித்தத்தைக் கொடுத்தார். ஆனால், பிசாசு வஞ்சித்துவிட்டான். நம்முடைய சித்தம் நாம் விரும்பினதை செய்யும்படி நமக்கு உதவி செய்கிறது. நமக்கு சுயசித்தம் கொடுத்த அவருக்கு விரோதமாய் செயல்படுவதற்கு நம்முடைய சுயசித்தம் உதவுகிறது. தேவன் எதைக்குறித்தும் பயப்படவில்லை. அசுத்த ஆவி ஒரு மனிதனுக்குள்ளே வரும்போது, அது அவனை அலைக்கழிக்கிறது, கெடுக்கிறது. நம்முடைய சுயசித்தத்தினாலே அவர் பயந்து, கவலைப்படுவதில்லை. நம்முடைய சுயசித்தத்தின் அடிப்படை நம்முடைய ஆத்துமா. நம்முடைய மனம்.

இரண்டு விதமான மனம் இருக்கிறது. சிந்தித்து செயல்படும் மனம், தானாய் இயங்கும் மனம். ஆழ்மனம், சிந்தித்து செயல்படும் மனதிற்கு கீழேயிருக்கிறது. ஒரு நாளில் எழுபது சதவீதத்திற்கும் மேலே நாம் ஆழ்மனதிலே தானே இயங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, ஆழ்மனம் மிகவும் முக்கியம். பலநேரங்களில் பழக்கவழக்கங்களினாலே, செய்வது தான் ஆழ்மனம். சில செயல்களை நீங்கள் தினமும் செய்து கொண்டிருக்கும் போது, உங்கள் மனம் அதை ஆழ் மனதிலே கொண்டு வந்து தானாக இயங்க ஆரம்பிக்கும். பல வருடங்களாக நம்முடைய ஆழ்மனதை நாம் பயத்திலும், கவலையிலும், குழப்பத்திலும், ஏக்கத்திலும் தான் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் தாத்தா, பாட்டிகளிடம் உங்கள் குழந்தைகளை விடாமலிருப்பதே நல்லது, ஏனென்றால், பலி, பயம் இதை பிள்ளைகளிடம் புகுத்திக் கொண்டேயிருப்பார்கள். உங்கள் குழந்தைகளை பயத்திலும், கவலையிலும், ஏக்கத்திலும் எதிர்மறையான பேச்சுகளையும் சொல்லி, சொல்லி வளர்த்தால், உங்கள் பிள்ளைகள் பயம் என்னும் குகைக்குள்ளேயே வளரும். அது அந்தப் பிள்ளைகளின் ஆழ்மனமாக மாறுகிறது.

வேதத்தில், எங்கெல்லாம் மனம் என்று வருகிறதோ அது உங்களுடைய மனம். எங்கெல்லாம் இருதயம் என்று வருகிறதோ, அது

உங்கள் ஆழ்மனம். இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என்று வேதம் கூறுகிறது. அப்படியென்றால், அவன் பேசும்போது, மனதில்தான் பேசுகிறான் நல்லவனாய்தானிருக்கிறான். ஆனால் இருதயத்திற்குள்ளே அருவருப்பாய் இருக்கிறது. அதினாலே அவன் உங்களை விட்டு போனவுடனே அவனுடைய இருதயம் திருக்குள்ளதாய் மாறி அதிலே செயல்பட ஆரம்பிக்கிறான்.

**நீதிமொழிகள் 23: 7 அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்: புசியும் பானம் பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது.**

ஒரு மனிதன் தன் இருதயத்தில் எப்படி நினைக்கிறானோ அதுவாகவே அவன் இருக்கிறான், மனம் தற்காலிகம். நீங்கள் சொல்லலாம், இந்த மனிதன் எவ்வளவு நன்றாகப் பேசினான், இனிமையாகப் பழகினான், ஆனால் எப்படி இப்படி பண்ண முடியும்? நீங்கள் அவனிடம் மனதில் தான் பேசிக் கொண்டிருந்தீர்கள், நீங்கள் அவனை விட்டுப் போனவுடனே இருதயம் தான் செயல்பட ஆரம்பித்தது. சிலவேளை நீங்கள் என்னிடம் பேசும் போது, பாஸ்டர் கோவப்படுகிறார், கத்துகிறார் என்று நினைக்கலாம்.

என் மனதிலே நான் திட்டுகிறேன். ஆனால் இருதயத்திலே நான் நல்லவன். அனுபவமில்லாத ஜனங்கள் மனதிலே சிரித்துப் பேசினவுடனே நம்பிவிடுகிறார்கள், அப்புறம் வீட்டிலே போய் நன்றாக அரைக்கும் போது தான் அறிவு, வரும். தாமதமாகிவிட்டது ஒன்றும் பண்ண முடியாது. காதலித்து ஓடிப்போகிறவர்கள் எல்லாரும் இப்படி தான். அநேகர் கிறிஸ்துவை அறியாதவர்களோடு பழகிவிடுகிறார்கள், ஆனால் இருதயம் உங்களுக்குத் தெரியாது. ஆண்டவரை அறியாமல் எப்படி அவர்கள் இருதயம் சரியாக இயங்க முடியும்?

அவர்களுடைய வீட்டைப்பார், குடும்பத்தைப் பார், பின்னணியத்தைப் பார். அப்போது தெரியும் அவர்கள் இருதயம். முட்டையெடுப்பதற்கு முன்பாக கூட்டைப் பார். எந்தக் கூட்டிலிருந்து வருகிறது என்று பார். கோழி முட்டை மாதிரிதான் தெரியும், பொரித்தால் கோழி வராது, கழுகு தான் வரும். பாம்பு முட்டையாக கூட இருக்கலாம். மனதை வைத்து ஜனங்களை நம்பாதீர்கள், நேசிக்காதீர்கள், வெறுக்காதீர்கள், இருதயத்தை அறிவது தேவனால் மட்டுமே முடியும்.

இதினால் தான் திருமணமோ, தோழனோ, தோழியோ தெரிந்தெடுப்பதற்கு முன்பாக நீங்கள் காத்திருக்க வேண்டும். இருதயத்தை அறிகிற தேவன் சொன்னாலொழிய சிரிக்கிறான், நன்றாக இருக்கிறான் முடியை ரஜினி மாதிரி பண்ணுகிறான். சூப்பராக பணம் வைத்திருக்கிறான். சூப்பராக கார் வைத்திருக்கிறான் என்று சென்றால், அல்லது நீங்கள் அப்படியொரு சூழ்நிலையிலிருந்தால் தேவன் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

நீங்கள் என்ன தேவையோடு இருக்கிறீர்களோ, தேவனிடத்திலிருந்து ஒரு அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளும் படியாக அதை தேவன் சந்திப்பார். உங்கள் எதிர்பார்ப்பு தான் தேவனுடைய அதிசயத்தை துரிதப்படுத்தும். இது முற்றிலும் உங்கள் இருதயத்தில் இருக்கிற எதிர்பார்ப்பை பற்றியிருக்கிறது. இந்த முழுநாளும் தேவனிடத்தில் உங்களுக்காக ஜெபித்திருக்கிறேன். இப்பொழுது, உங்கள் எதிர்பார்ப்பு மட்டும் தான் தேவனை உங்களை நோக்கியிழுக்கும்.

உங்கள் ஆத்துமா என்பது, உங்களுடைய மனம், சித்தம், உணர்ச்சிகள் இவை சம்மந்தப்பட்டது. நாம் எப்படியியங்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டால் தான் நாம் பெற்றுக் கொள்ள வேண்டியதைப் பெற்றுக் கொள்ள முடியும். உங்களைப் பற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். ஆத்துமா என்பது உங்களில் ஒரு பகுதி. வேதாகமம் இவைகளைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுகிறது. உங்களுடைய ஆத்துமாவின் மூன்று பகுதிகளிலும் விசுவாசம் எப்படி மேற்கொள்கிறது என்று பார்த்தோம். ஒருவேளை உங்களுக்குப் புரியாவிட்டாலும் தேவனுடைய வழியை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்கள்.

முதலாவது, உங்களுடைய லாஜிக்கல் மனம் தேவனுடைய வழிகளை ஒத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது, உணர்ச்சிகள் விசுவாசத்தின் அடிப்படையில் இயங்க வேண்டும் பயத்தின் அடிப்படையில் அல்ல.

மூன்றாவது, விசுவாசத்தில் இயங்க வேண்டும் என்ற சித்தம் உங்களுக்கு இருக்க வேண்டும். ஏறக்குறைய இருநூற்றைம்பது பேர் இந்த சபையிலே இருக்கிறோம்.

கடந்த நான்கைந்து வருடங்களுக்கு முன்பாக, தேவன் என்னுடைய ஆவியில் ஒன்றை வைத்தார். அது விசுவாசத்தினாலே இயங்க ஆரம்பித்தது. தேவன் என்னை எலக்ட்ரானிக் சிட்டியிலே ஆரம்பிக்க

சொன்னவுடனே நான் அதற்கு கீழ்ப்படிந்து ஆரம்பித்தேன். தேவனுடைய வழிகளை ஒத்துக் கொள்வது அது லாஜிக்கல் மனம்.

இரண்டாவது, அதை செய்யும் படியான சித்தமும் விருப்பமும் எனக்கிருந்தது. ஒரு வேளை தேவன் என்னை அழைத்திருக்கிறார், அழைத்திருக்கிறார் என்று சொல்லிக் கொண்டே, போகாமல் இருந்திருக்கலாம். ஆனால் நானோ அதன் அடிப்படையில் இயங்கும்படி முயற்சித்தேன். அதற்கு பணஉதவி யாரும் செய்யவில்லை. ஜனங்கள் யாருமில்லை. ஆனால் அதன்மேல் இயங்கினேன். எனக்கு பயமில்லை. என்னுடைய உணர்ச்சிகளும் விசுவாசத்தின் அடிப்படையில் இருந்தது. இந்த உலகத்தில் நாம் செய்கிற காரியங்கள் அனைத்திலும் , இந்த மூன்று காரியங்களிலும் விசுவாசத்தில் நாம் இணைந்திருக்க வேண்டும். இணைய முடியாவிட்டால் , இந்த மூன்று காரியங்களும் இணையும் வரை தேவனுடைய சமூகத்தில் நீங்கள் காத்திருக்க வேண்டும்.

# *புதிய உடன்படிக்கை-1*

# *ஒப்புரவாக்குதலின் ஊழியம்*

தேவன் நல்லவராய் இருந்து கடந்த நாட்கள் முழுவதும் நம்மை வழிநடத்தி வருகிறார். அவருடைய வழிநடத்துதலுக்காக நான் ஆண்டவருக்கு நன்றி சொல்கிறேன். அவர் நம்மோடு பேசுகிறதற்காகவும், நமக்குக் கற்றுக் கொடுத்து நம்மை வழிநடத்துகிறதற்காகவும் நான் அவருக்கு நன்றி சொல்கிறேன். என்னோடு இணைந்து யாரெல்லாம் உபவாசத்திலும், ஜெபத்திலும் இருக்கிறீர்களோ மெய்யாகவே உங்களுடைய வாழ்க்கையிலே சில காரியங்கள் வெளிப்பட ஆரம்பிக்கும். நீங்கள் ஆச்சரியப்படும்படி உங்கள் வாழ்க்கை மாறும்.

2கொரிந்தியர் 5

16.**ஆகையால் இதுமுதற்கொண்டுஇ நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம் நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும்இ இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.**

17.**இப்படியிருக்கஇ ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயினஇ எல்லாம் புதிதாயின.**

18. **இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கிஇ ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.**

19. **அதென்னவெனில்இ தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்இ கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கிஇ ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.**

20. **ஆனபடியினாலேஇ தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோலஇ நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்துஇ தேவனோடே ஒப்புரவாகுங்கள்**

**என்றுஇ கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.**

21. **நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குஇ பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.**

**2கொரிந்தியர் 6**

1. **தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்குஇ உடன்வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.**

2. **அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்துஇ இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே இதோஇ இப்பொழுதே அநுக்கிரககாலம்இ இப்பொழுதே இரட்சணிய நாள்.**

புதிய ஏற்பாட்டிலே பவுல் மூன்று விதமான ஊழியத்தைக் குறித்துப் பேசுகிறார். சபைக்கு சொல்லப்பட்ட ஐந்து விதமான ஊழியத்தைப் பற்றியல்ல. பொதுவாக கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தைக் குறித்து மூன்று காரியங்களைப் பவுல் சொல்கிறார்.

1. நியாயத்தீர்ப்பின் ஊழியம்.
2. மரணத்தின் ஊழியம்
3. மனந்திரும்புதலின் ஊழியம்

தேவனின் புதிய உடன்படிக்கை குறித்து நல்ல ஞானம் நமக்கு இருக்க வேண்டும். அப்போது அதன் பலனை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அநேக கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தாலும்கூட, திருவிருந்தை எடுத்தாலும்கூட அவர்கள் மனது பழைய உடன்படிக்கையின் படிதான் இயங்குகிறது. உங்கள் மனது பழைய உடன்படிக்கையிலே இயங்கும் போது, பரிசுத்த ஆவியின் உதவியை நீங்கள் பெற்றுக் கொள்ளமாட்டீர்கள். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் புதிய உடன்படிக்கையின் முகவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியின் உதவி இல்லாமல் இருக்கும் போது, உங்களுக்கு அற்புதங்கள் இருக்காது. உங்களுடைய சுய பெலத்தினால் ஒரு வாழ்க்கை வாழ முயற்சிப்பீர்கள். உங்களுடைய லாஜிக்கல் மனதைப் பொறுத்து ஒரு வாழ்க்கை வாழ நீங்கள் முயற்சிப்பீர்கள். தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஞானத்தைக் கொண்டு நீங்கள் வாழ முயற்சிப்பீர்கள். பரிசேயர்களைப் போல தேவனுடைய வார்த்தையைப்

புரிந்து கொண்டு வாழ்கிற வாழ்க்கையை இயேசு சொல்லவில்லை. “நான் பரிசுத்த ஆவியை உங்களுக்கு அனுப்புவேன் அவர் உங்களுக்கு கற்றுக் கொடுப்பார். அவர் உங்களை வழிநடத்துவார். அவர் உங்களுக்குப் போதனை செய்வார்” என்று இயேசு சொல்கிறார். இது வேறுபட்ட அனுபவம்.

ஒரு வரைபடம் (மேப்) இருக்கிறது. அதிலே புதையல் எங்கேயிருக்கிறது என்று தேடுகிறீர்கள். இது தான் பழைய ஏற்பாடு. நீங்கள் அங்குமிங்கும் போய் காரியங்களை செய்ய முயற்சிக்கிறீர்கள். ‘நான் உங்களுக்கு ஒரு வழிகாட்டியை அனுப்புவேன். நீங்கள் அந்த வழிகாட்டியோடு இணையும் போது, உங்களுடைய ஆவி பெலனடையும் போது, உள்ளார்ந்த மனிதன் பெலனடையும் போது, பரிசுத்த ஆவியானவர் கற்றுக் கொடுப்பார். உங்களை கீழிருந்து மேலே கொண்டு செல்வார்.’ என்று தேவன் சொல்கிறார். அப்போது அந்த புதையல் உங்களுக்கு கிடைக்கும். பரிசுத்த ஆவியானவருக்கு நாம் செவி கொடுக்க வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும்படிக்கு நம் மனதில் உள்ள பழைய அனுபவங்களை எல்லாம் நாம் மாற்ற வேண்டும்.

அநேகர் பலவிதமான கிறிஸ்தவப் பின்னணியில் இருந்து வருகிறோம். புதிய உடன்படிக்கைக்கும் பழைய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசம் நம்மில் பலருக்கு தெரிவதில்லை. புதிய ஏற்பாடு வந்த உடனே பழைய ஏற்பாடு ஒழிந்து போயிற்று என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது. உங்களால் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் சேர்த்துப் படிக்க முடியாது. புதிய திராட்சை ரசத்தை பழைய துருத்தியில் ஊற்ற முடியாது. கொஞ்சம் புளித்த மாவானது மொத்த மாவையும் புளிப்பாக்கி விடும் என்று வேதம் சொல்கிறது. இந்த வி'யத்தில் பாவத்தைக் குறித்து அவர் பேசவில்லை. பழைய ஏற்பாட்டைக் குறித்த சிந்தனை புளித்த மாவைப் போன்றது. அதிலே கொஞ்சத்தை புதிய உடன்படிக்கையிலே கொண்டு வந்தால் அது அனைத்தையும் கெடுத்து விடும்.

பவுல் இந்த இரண்டு ஊழியங்களையும் சரியான முறையில் வித்தியாசப் படுத்துகிறார். பழைய ஏற்பாட்டை நியாயத்தீர்ப்பின் ஊழியம், மரணத்தின் ஊழியம் என்று சொல்கிறார். புதிய ஏற்பாட்டை ஒப்புரவாக்குதலின் ஊழியம் என்கிறார்.

**2கொரிந்தியர் 3:7**

**எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால்இ இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கி பார்க்கக்கூடாதிருந்தார்களே**.

இது பழைய ஏற்பாட்டின் ஊழியம். இது சட்டத்தின் ஊழியம். இங்கே அநேக விதிகள் இருக்கும். உங்கள் வழிகளை நீங்களே பார்த்துக் கொள்ள வேண்டும். அது தேவனுடைய உடன்படிக்கையை நீக்கி விட்டது. தேவனுக்கு இப்படிப்பட்ட ஒரு ஊழியத்தை இடையில் கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனை இருக்கவில்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலையிலே தேவனுக்கு எதிர்த்து நின்றார்கள். தேவனுடைய தீர்க்கதரிசிக்கு எதிர்த்து நின்றார்கள். சீனாய் மலை வரைக்கும் காரியங்கள் வித்தியாசமாக நடந்தது. திடீரென்று தேவன் போகலாம் என்று சொன்னால், அவர்கள் போக வேண்டும். அவர் நிற்க சொன்னால் நிற்க வேண்டும். தண்ணீர் இல்லையென்றால், கண்டுபிடிக்கப்படும். எல்லாமே அழகாக நடந்தது. ஆனால், ஜனங்களின் கையில் எந்தக் காரியமும் இருக்கவில்லை. எல்லாமே தேவனுடைய கையில் இருந்தது. தேவன் தம்முடைய சித்தத்தின்படி காரியங்களை செய்து கொண்டிருந்தார். ஜனங்களுக்கு அது பிடிக்கவில்லை.

நானூறு வருடங்களாக அவர்கள் எகிப்தின் பொருளாதார அடிப்படையில் வாழ்ந்தார்கள். எவ்வளவு பணம் கையில் இருக்கிறது. எப்போது மழை வரும் என்று தெரியும். எப்போது விதைக்க வேண்டும்? எப்போது சேமிக்க வேண்டும்? என்று அவர்களுக்குத் தெரியும். இன்னும் ஆறு மாதத்திற்கு எந்த சம்பளமும் வரவில்லை என்றாலும் எப்படி வாழ வேண்டும் என்று தெரியும். அவர்கள் வல்லமையாக உணர்ந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையை அவர்களே கட்டுபாட்டுக்குள் வைத்திருப்பதாக அவர்களுக்குத் தோன்றிற்று. ஒரு பரிதாபமான வாழ்க்கை வாழ்ந்தாலும்கூட, எகிப்தியருக்கு அடிமைகளாக இருந்தாலும்கூட அவர்களுக்கு ஒரு பெருமை இருந்தது. ‘எங்களுடைய வாழ்க்கை எங்களுடைய கையில் இருக்கிறது’ என்ற ஒரு பெருமை இருந்தது. ஆனால் எகிப்தை விட்டு வெளியே வந்த போது, காரியங்கள் கையிலிருந்து போய்விட்டது. காரியங்கள் நன்றாக நடந்தது. அதைப் பற்றி சந்தேகமில்லை. ஆனால் அனைத்தும் வித்தியாசமாக இருந்தது. நிலையாக எதுவுமில்லை. எவ்வளவு நாள் உயிரோடு இருப்போம் என்று தெரியாத மாதிரி, எந்த திசையில் போவோம் என்பது தெரியாது. என்ன செய்ய வேண்டும் என்பதே

தெரியாது. சிறு குழந்தைகளைப் போல தேவனைப் பின்பற்ற வேண்டும். அவர் போகச் சொன்னால் போக வேண்டும். அவர் நிற்கச் சொன்னால் நிற்க வேண்டும். அவர் சாப்பிட சொன்னால் சாப்பிட வேண்டும். தூங்கச் சொன்னால் உடனே தூங்க வேண்டும். எழும்பு என்று சொன்ன உடனே எழும்ப வேண்டும். அது நன்றாகத்தான் இருந்தது. ஆனால் அவர்களுக்கு அது பிடிக்கவில்லை, க்'டமாகத் தோன்றினது. மோசேயிடம் 'தேவன் உன்னோடு மட்டும்தான் பேசுவாரா? ஏன் எங்கள் மேல் ஆதிக்கம் செலுத்துகிறாய்? உன்னுடைய ஆதிக்கம் எங்களுக்குப் பிடிக்கவில்லை. நாங்கள் தேவனை நிராகரிக்கிறோம். தேவனுக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது என்பது எங்களுக்கு தெரிய வேண்டும். அதை எழுதிக் கொடு' என்று சொல்லி தேவனுக்கு எதிராக நின்றார்கள். அவர்களுடைய சித்தத்தின் படி காரியங்களை நடத்த வேண்டும் என்று சொல்லும் போது, 'இந்த சட்டங்களை நான் உங்களுக்கு கொடுக்கிறேன் இந்த சட்டத்திற்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களா? என்று கேட்டபோது, அந்தச் சட்டங்களை எழுதிக் கொடுங்கள் நான் அதற்கு கீழ்ப்படிந்து எங்கள் விருப்பத்தின் படி செய்கிறோம்' என்று அவர்கள் சொன்னார்கள். தேவன் அந்தச் சட்டங்களை எழுதிக் கொடுக்கும் வரைக்கும் மோசே அநேக முறை அந்த மலையிலே ஏறி, இறங்க வேண்டியதாயிருந்தது. மோசே அந்த சட்டங்களை கொண்டு வந்து ஜனங்களிடத்தில் வாசித்த போது, 'அந்த சட்டங்களை எங்களுக்குக் கொடு நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பது எங்களுக்குத் தெரியும்' என்றார்கள். அப்போது கிருபை மாறி சட்டம் வந்தது. சட்டம் வரும் போது, அங்கே கிருபை இருக்காது. கிருபை இல்லை, அன்பு இல்லை, மன்னிப்பு கிடையாது, மறப்பதும் கிடையாது. சட்டம் வருகிறது, உங்கள் பாவத்திற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். பல்லுக்குப் பல். கண்ணுக்குக் கண். இது தான் தண்டனை. இது தான் எங்களுக்கு வேண்டும். தேவனுடைய நடத்துதல் எல்லாம் வேண்டாமென்று ஜனங்கள் சொன்னார்கள். "இனி என்ன நடக்கும் என்ன நடக்கும் என்ற கற்பனை செய்கிற அந்த வேலையெல்லாம் எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்றார்கள். விசுவாசத்தின் அடிப்படையில் வாழ விரும்பாமல் எழுத்தின் அடிப்படையில் வாழ முயற்சித்தார்கள். நாம் சட்டங்களைப் பின்பற்றும் போது, காரியங்கள் நடக்காத போது, தேவனுடைய சட்டையைப் பிடித்து இது ஏன் நடக்கவில்லை என்று கேட்கலாம், என்று

நினைத்தார்கள். அப்படித்தான் எகிப்திலே நானூறு வரு'ம் அவர்கள் வாழ்ந்தார்கள். அப்போது தேவன் அவர்களுக்கு நியாயப் பிரமாணங்களை கொடுத்தார். நியாயப்பிரமாணம் வந்த போது, சீனாய்

மலையின் அடியிலே மூவாயிரம் பேர் கொல்லப் பட்டார்கள். ஏனென்றால் தேவன் அவர்களுக்கு கொடுத்த நியாயப் பிரமாணத்தை பின்பற்ற அவர்களால் முடியவில்லை. அந்தக் கற்பலகையை அவர் கொடுப்பதற்கு முன்பாகவே, வாய்மொழியாகவே சட்டங்களையும் நியாயப் பிரமாணங்களையும் கொடுத்த போது அவர்கள் நாங்கள் பின்பற்றுவோம் என்று ஒத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மோசே மலையின் மேல் போய் எழுதிக் கொண்டு வருவதற்கு முன்பதாகவே, அந்த நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் போய்விட்டார்கள். அந்த நொடிப் பொழுதிலே மூவாயிரம் பேர் இறந்து போனார்கள். தலைமுறை தலைமுறையாக நியாயப் பிரமாணத்திலே அவர்கள் அடிமைகளாக்கப் பட்டிருந்தார்கள்.

ஆகையால் தேவன் தாமே சரீரப்பிரகாரமாக நம்மிடத்தில் வந்தார். மாம்சப் பிரகாரமாக ஒரு கபடமில்லாதவராக, குற்றமில்லாதவராக, நியாயப்பிரமாணத்தின் சகல சாபங்களையும் அவர் தன்மேலே சுமந்தார். நியாயப்பிரமாண காலத்திற்கு முன்புகூட பாவஞ்செய்யப்பட்டது. தவறான காரியம் நடந்தது. உதாரணமாக ஆபிரகாம், ஈசாக்கு. யாக்கோபு இவர்களின் கதையை நாம் வாசிக்கும் போது, இவர்களெல்லாரும் அதிகமான தவறுகளை திரும்பவும் திரும்பவும் செய்தார்கள். அது தான் உண்மை.

ஆபிரகாம், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படி தன் மனைவியை சகோதரி என்று சொன்னார். அவருடைய மனைவியை திருமணம் செய்து கொள்ளும் படி அழைத்துச் செல்லும் போது, அவளை கொண்டு செல்லுங்கள் என்னைக் கொன்று விடாதீர்கள் என்று சொன்னான். ஒரு பொய் மற்றும் தன் மனைவியை விற்றுப் போடுகிறார். அதற்கான தண்டனையை யார் செலுத்தியது? அதற்கு ஒரு தண்டனையும் ஆபிரகாமுக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக, தேவன் அபிமலேக் இராஜாவினுடைய கனவிலே தோன்றி “இந்த மனிதனிமித்தம் நீ செத்தாய் இவளை திரும்ப அனுப்பி விடு” என்று சொல்கிறார். இதுதான் தேவனின் நீதி.

இயேசுவை நீங்கள் பின்பற்றினால், ஒரு நண்பனைப் போல அவர் கூடயிருப்பார். ஆபிரகாம் இந்த காரியங்களை செய்ததற்காக தேவன் அவரைக் கடிந்து கொள்ளவோ தண்டிக்கவோ இல்லை. சீனாய் மலையிலே நியாயப் பிரமாணம் கொடுக்கப் பட்ட பிறகு,

எல்லாஇடத்திலும், எங்கேயெல்லாம் நியாயப்பிரமாணம் மீறப்படிகிறதோ, அங்கெல்லாம் உடனே தண்டனை, உடனே மரணம். இது தான் இரண்டாவது உடன்படிக்கை. இரண்டாம்

உடன்படிக்கையில் இருந்து நம்மை விடுவித்து புதிய உடன்படிக்கைக்குக் கொண்டு செல்லும்படி இயேசு வந்தார். ஆபிரகாம் கிருபையின் உடன்படிக்கையில் இருந்தார். மோசேயின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்கள் நியாயப் பிரமாணத்தின் உடன்படிக்கையில் வந்தார்கள். இயேசு நியாயப்பிரமாணத்தின் சட்டத்தை நிறைவேற்றும்படி வந்தார். அவர் திரும்பவும் ஒரு கதவைத் திறக்கிறார். அது தான் கிருபையின் உடன்படிக்கை. ஒப்புரவாக்குதலின் ஊழியம் என்று சொல்கிறோம். பழைய ஊழியம் தான் நியாயத்தீர்ப்பின் ஊழியம் என்று சொல்லப் படுகிறது. அந்த ஊழியத்திலே நியாயாதிபதி கொடுக்கிற, நீ இவ்வளவு வருடம் ஜெயிலில் இருக்க வேண்டும். இவ்வளவு ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் என்கிற தீர்ப்பு. அநேக இடங்களில் பவுல் இதைப் பற்றி எழுதுகிறார். அது எப்போதுமே நியாயத்தீர்ப்பின் ஊழியத்திலே இயங்குகிற ஒரு போதகர், அவர் சபையை எப்பொழுதுமே நியாயந்தீர்ப்பார், பயமுறுத்துவார், சபிப்பார். சபையார் எல்லாரும் நியாயத்தீர்ப்பின் பயத்தினிமித்தம் தேவனை ஆராதிப்பார்கள். அந்த ஊழியத்திற்கு பவுல் இன்னொரு பட்டப் பெயர் கொடுக்கிறார். அது மரணத்தின் ஊழியம் என்று.

இன்றைக்கும்கூட அநேக ஊழியக்காரர்கள், அநேக சபைகள் புதிய உடன்படிக்கையை புரிந்து கொள்ளாமல், எப்போதும் நியாயப் பிரமாணத்தைக் குறித்துப் பேசுகிறார்கள். ஒருகாலத்திலே நானும்கூட அப்படிப்பட்ட ஊழியக்காரராய் இருந்தேன் . உபாகாமம் 28ம் அதிகாரம் தான் எனக்கு மிகவும் பிடித்தது. “ஆசிர்வாதமும் சாபமும்” ஜனங்களைப் பயமுறுத்துவேன். ஜனங்களெல்லாரும் அதற்காக என்னை நேசித்தார்கள். ஏனென்றால் அவர்கள் அது தான் ஊழியம் என்று நினைத்தார்கள். அந்த நாட்களிலே நான் கல்லூரி முடித்தவுடன் மிகவும் புத்துணர்ச்சியாக, அக்கினியாக எலியாவைப் போல மிகவும் கோபக்காரனாக வந்திருந்தேன். ஜனங்களைப் பார்த்து நான் அவர்களை நியாயந் தீர்ப்பேன், சத்தம் போடுவேன், கோபப்படுவேன், அப்படி நான் நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசும் போது, நான் மிகவும் பரிசுத்தவான் என்று எல்லாரும் நினைப்பார்கள். நான் இப்போது புதிய உடன்படிக்கை பற்றி பேசும் போது, நான் பாவத்திலிருக்கிறேன் அதினால் தான் இதைப் பற்றி பேசுகிறேன் என்று நீங்கள் நினைப்பீர்கள். நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் சரி என்னுடைய சாட்சி தேவனிடத்தில் இருக்கிறது.

நாம் இந்த 2020ம் வருடத்திற்குள் நுழையும் போது, எப்படி இயங்குகிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையால் பழைய ஊழியம் என்பது நியாயத்தீர்ப்பின் ஊழியம். நியாயத்தீர்ப்பின்

சாபத்திலிருந்து இயேசு நம்மை விடுவித்தார். நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றினார். பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தார். நீங்கள் ஆவியிலே ஜீவித்தால் வாழுவீர்கள். புதிய ஊழியம் ஒப்புரவாக்குதலின் ஊழியம். ஒப்புரவாக்குதலில் நியாயத் தீர்ப்பு இல்லை. கணவனும் மனைவியும் நீதிமன்றத்திற்கு செல்கிறார்கள். அங்கே நீதிபதி சொல்கிறார், உங்களுடைய பிரச்சினை அது உங்களுக்கு பெரிய பிரச்சினையாக தோன்றுகிறது. ஆனால் எனக்கு அது பெரிய பிரச்சினையாகவே தோன்றவில்லை. நீங்கள் ஒப்புரவாகும்படி நான் ஆறுமாதம் அவகாசம் கொடுக்கிறேன். அதுவரை நீங்கள் ஒப்புரவாகவில்லையென்றால் மீண்டும் பார்க்கலாம் என்று சொல்வார். அது தான் ஒப்புரவாகுதல். ஒப்புரவாகுதலில் நியாயத்தீர்ப்பு இல்லை. அங்கே சட்டமில்லை. அங்கே நீதிபதி அவர்கள் மீண்டும் சேர்வதற்கு ஒரு அவகாசம் கொடுக்கிறார்.

இயேசு தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் நின்று, ‘அவர்களுக்காக நான் மரித்திருக்கிறேன், நியாயப்பிரமாணத்தின் பாவத்தினுடைய சகல பாரங்களையும் நான் சுமந்திருக்கிறேன்’ என்று மனிதனையும், தேவனையும் அவர் ஒப்புரவாக்குகிறார். கீழேவிழுந்துவிட்ட மனிதனையும் ஆவியாகிய தேவனையும் அவர் ஒப்புரவாக்குகிறார். அந்த ஒப்புரவாகுதல் நடக்கும் போது, சட்டம் இயக்கத்தில் இல்லை. சட்டம் வரும் போது, தீர்ப்பு தான் வரும்.

மனைவி ‘இவர் என்னை இரண்டு விசை அடித்தார், அவர் என்னை உதைத்தார்’ என்பாள். கணவன், ‘இவள் எனக்கு சாப்பாடு கொடுக்கவில்லை, எந்தக் காரியமும் செய்வதில்லை’ என்று சொல்லும் போது, சட்டத்தை இதற்கெல்லாம் பயன்படுத்த முடியும். ஆனால், சட்டத்தை இப்போது நாம் அமல்படுத்த மாட்டோம் நீங்கள் ஒப்புரவாகும்படி உங்களுக்கு ஆறுமாதம் அவகாசம் கொடுக்கிறோம். நீதிமன்றத்திற்கு வெளியே ஒப்புரவாகுங்கள் என்ற நீதிபதி சொல்கிறார். நீங்கள் பழையதை மறந்து புதியதிற்குள்ளாகச் செல்கிறீர்கள். அது தான் இங்கே நடக்கிறது, மனிதன் தேவனோடு ஒப்பரவாகுதல். எல்லாவற்றையும் மறந்து சட்டத்தை அமலாக்காமல்,

உங்களுக்குள் பெலவீனம் இருக்கலாம், உங்களுக்குள் தோல்விகள் இருக்கலாம், அங்குமிங்கும் கீழே விழுகிறீர்கள், சில கெட்ட அனுபவங்களும் சில பயங்களும் உங்கள் இருதயத்தில் இருக்கலாம். இந்த உலகத்தில் உள்ள காரியங்களினால் உங்கள் மனது பாதிக்கப் பட்டிருக்கலாம். இதினிமித்தம் நாம் கீழே விழும் போது, இயேசு ‘என்

மகன், என் மகள் இவர்களுக்காக நான் மரித்திருக்கிறேன். அவர்கள் உம்மோடு இணையட்டும்'என்று கூறுகிறார்.

நீங்கள் கீழே விழும் போது சட்டம் இயக்கத்தில் இல்லை. கிருபை அங்கே இயங்குகிறது. உங்களுக்காக யாரோ ஒருவர் தண்டனையைச் செலுத்தியிருக்கிறார். அதை யாரோ செலுத்தினதினால் அதைக் கிருபை என்று சொல்கிறோம். நாம் நகரும் போது, உங்கள் விசுவாசத்தையும், உங்கள் நம்பிக்கையையும் புதிய உடன்படிக்கையின் மேலே நீங்கள் வைக்க வேண்டும். நீங்கள் அதைச் செய்யவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் மரணம் இயங்கும். புதிய உடன்படிக்கை புரியாவிட்டால் என்ன? நான் அதிலே தான் இருக்கிறேன் என்று சொல்லலாம். அப்படிநடக்காது. நியாயப்பிரமாணத்தின் படி இயங்கினால் நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்திலே எழுதுகிறார். ஆனால் கிருபையிலும் விசுவாசத்திலும் வாழுகிறவர்கள் ஆபிரகாமின் மூலம் அவர்கள் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் கிருபையையும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மூலம் இயங்குவதை விசுவாசித்தால், நீங்கள் ஆபிரகாமின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.

யாக்கோபுடைய பிள்ளைகளை இஸ்ரவேல் என்கிறோம். அவர்கள் எகிப்திற்கு வருவதற்கு முன்னாலே அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? சட்டம் அங்கே இருக்கவில்லை. மரணம் இருக்கவில்லை. எகிப்திலிருந்து வெளியே வந்த போதும்கூட முதல் நாளில் இருந்தே முறுமுறுப்பும் சண்டையும் தான் போட்டார்கள். ஆனால் சட்டம் கொடுக்கப்படும் வரைக்கும் யாரும் மரிக்கவில்லை. நியாயப்பிரமாணம் வந்தவுடனே முறுமுறுக்கிறார்கள், மரிக்கிறார்கள். எதிர்க்கிறார்கள், பூமி பிளந்து அவர்களை விழுங்கிக் கொள்கிறது. சீனாய் மலை வரைக்கும் மரணம் இருக்கவில்லை. நியாயப்பிரமாணம் வந்தபோது, தொடர்ச்சியான மரணம். இந்த மனநிலையில் இருந்து நீங்கள் வெளியே வந்து கிறிஸ்து இயேசுவை நீங்கள் பற்றிக் கொள்ளும் படியாக நான் ஜெபிக்கிறேன். ஒப்புரவாகுதலின் ஊழியத்தை தேவன் பவுலுக்குக் கொடுத்த போது, ''ஜனங்களின் பாவத்தை நான் கருதவில்லை. நீயும் கருதாதே. ஜனங்களுடைய பாவத்தைப் பற்றி நான் பேசவில்லை, நீயும் பேசாதே என்னோடு ஒப்புரவாகு என்று மட்டும் சொல்'' என்று கூறியிருப்பார். இது மனைவி கணவனிடம் நீ எப்படி என்னை நடத்தினாய், எனக்காக நீ என்ன செய்தாய் என்று நான் பொருட்படுத்தவில்லை அது பழையது. நாம் ஒப்புரவாகிவிடுவோம். உன்னுடைய பெலவீனத்தின் நிமித்தம் நீ இதை செய்திருக்கலாம்.

ஒருவேளை காரணத்தோடு கூட நீ செய்திருக்கலாம் ஆனால் இப்போது நாம் ஒப்பரவாகுவோம். பாவம் செய்கிறதற்கு லைசென்ஸ் கொடுக்கிறது போலத் தோன்றுகிறது. இதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இப்போது இருப்பது போலவே இருக்க வேண்டுமென்று நினைத்தால், அது உங்கள் பிரச்சினை. இதை நீங்கள் எதிர்மறையாக எடுத்தால் அது உங்கள் பிரச்சினை. ஆனால் வேதம் சொல்கிறபடி ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நான் செய்கிறேன். அதைத் தான் நான் சொல்கிறேன். பழைய ஏற்பாட்டின் ஞானத்தை வைத்து உங்களுக்கு பயத்தை உண்டாக்கி, நியாயத்தீர்ப்பின் ஊழியத்தை நான் செய்ய மாட்டேன்.

உங்களைப் பரிசுத்தப்படுத்தி, உங்கள் வழிகளை மாற்றி, மனப்பக்குவத்தை மாற்ற ஆவியானவராலே மட்டும் தான் முடியும். ஆவியானவர் மட்டுமே வழிநடத்த முடியும். இதை நாம் நன்றாகப் புரிந்து கொண்டு பலத்தையும், பலவீனத்தையும் தேவனுடைய கைகளில் ஒப்புக் கொடுக்க வேண்டும். ஆண்டவருக்கு உங்கள் பெலமோ, பெலவீனமோ பொருட்டல்ல. மோசேயை தேவன் உபயோகப்படுத்தும் முன்பாக அவனுடைய பெலமெல்லாம் உபயோகமற்றதாய்ப் போக வேண்டியிருந்தது. நீங்கள் ஒருவேளை சொல்லலாம். ‘‘இந்த காரியங்களில் நான் மிகவும் பெலவான் நான் இங்கெல்லாம் விழமாட்டேன்’’ என்று சொல்லலாம். அந்த இடத்திலே நீ எவ்வளவு பலவான் என்பதை தேவன் உனக்குக் காண்பிப்பார். உங்கள் பெலவீனத்தை தேவனிடத்தில் கொண்டு வாருங்கள் . தேவன் உங்களை உருவாக்கி நீங்கள் எவ்வளவு பெலவான் என்பதைக் காண்பிப்பார். இது ஆவியானவருடைய ஊழியம். இது சட்டமல்ல. இது பயமுறுத்துதல் அல்ல. இவையனைத்தும் தேவனுடைய ஆவியைப் பற்றினது

. ஒரு மகள் தன்னுடைய கணவனிடம் விவாகரத்து கேட்கும் சூழ்நிலையிலே, மகளுடைய தகப்பனார், மருமகனிடம் வந்து ‘நான் உன்னை கெஞ்சுகிறேன். இதுவரை நடந்து முடிந்தெல்லாம் நீ கருதாதே. சட்டத்தைக் கொண்டு வரவேண்டாம். எந்த ஒரு நியாயத் தீர்ப்பும் செய்ய வேண்டாம். நான் உன்னை நியாயந்தீர்க்கவில்லை. என் மகள் உன்னை நியாயந்தீர்க்கவில்லை. நீங்கள் இருவரும் ஒப்புரவாகி, மீண்டும் அன்பிலே வாழுங்கள்’என்று சொல்கிறார்.

பவுல் சொல்கிறார், கிறிஸ்துவின் நிமித்தம் உங்களை கெஞ்சி மன்றாடிக் கேட்கவேண்டியதாய் இருக்கிறது, நீங்கள் ஒப்புரவாகுங்கள்

என்று. ஏனென்றால் நாம் அவருடைய நீதியாகும்படிக்கு, பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். நீங்கள் நீதியாக வாழ்வதினால், நீங்கள் தேவனுடைய நீதியாக மாறுகிறது அல்ல. உங்களுக்காக எல்லாவற்றையும் நிறைவேற்றின இயேசுவின் விசுவாசத்தின் நிமித்தம் அந்த நீதியை நீங்கள் அடைகிறீர்கள். ஆகையால் வேதம், நீதிமான்கள் தேவனுடைய மேல் உள்ள விசுவாசத்தின் நிமித்தம் வாழ்வார்கள் என்று சொல்கிறது.

தேவனுடைய உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்கு புத்தி சொல்கிறோம், உங்களை உற்சாகப்படுத்துகிறோம். முதலாவது, கெஞ்சுகிறார். இப்போது உற்சாகப்படுத்துகிறார். தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெறாதபடிக்கு, அவரை நம்ப ஆரம்பியுங்கள். அநுக்கிரகாலத்திலே நான் உனக்கு செவிகொடுத்து, இரட்சண்ய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே. இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சண்ய நாள்.

தேவனுடைய அநுக்கிரம் அவருடைய ஜனங்களுக்கு. பழிவாங்குதல் எதிரிகளுக்கு. தேவனை விசுவாசத்தினால் பின்பற்றுகிறவர்களுக்கு அநுக்கிரகாலம். பழிவாங்குதல் இயேசுவை அறியாதவர்களுக்கு. பரிசுத்த ஆவி உங்களுக்குள் வரும்போது அவர் உங்களுக்குக் கற்றுக் கொடுப்பார். நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் அவர் உங்களுக்குப் போதிப்பார். வெளிப்பாடு படிப்படியாகக் கொடுக்கப்படும்.

நான் வாசிக்கச் சொன்னபடி, ஏசாயா 60, 61, 62 வாசிக்க ஆரம்பிக்கும் போது, பிசாசு வந்து உங்களிடம், பாஸ்டரால் இதை செய்ய முடியும், அந்த பிரதரால் இதை செய்ய முடியும். அந்த சிஸ்டரால் இதை செய்ய முடியும். ஆனால் உன்னால் இதை செய்ய முடியாது. “நீ எவ்வளவு மோசமானவன் என்பது உனக்குத் தெரியும் நீ துன்மார்க்கன். உன் இருதயம் மோசம். நீ அங்குமிங்கும் பார்க்கிறாய். அதையும், இதையும் எடுக்கிறாய்” என்பான். அப்போது, நீங்கள், “நான் பரிசுத்தவான் அல்ல. நான் நல்லவன் அல்ல. எனக்குத் தகுதி இல்லை. நான் இதோடு இணைய முடியாது” என்பீர்கள். பிசாசின் வேலை மற்றவர்களைக் குற்றப்படுத்துவது.

வெளிப்படுத்துதலில் இவ்வாறு சொல்லப்படுபகிறது, இந்த சகோதரரை குற்றம் சொல்கிறவன் கீழே விழுந்திருக்கிறான். எப்போதுமே அவன் ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்து, அந்த குற்ற உணர்வை உண்டாக்க முயற்சிப்பான். சில போதகர்கள் புதிய உடன்படிக்கைப் பற்றி

தெரியாததினாலே இதைச் செய்கிறார்கள். கர்த்தரின் சரீரமாகிய சபையிலே குற்ற உணர்வு தான் அதிகமாக விசுவாசிகளைக் கொல்கிறது. இருதயப் பிரச்சினை, கேன்சர் போன்ற அநேக காரியங்கள் உங்கள் வாழ்க்கையிலே வருகிறது. கிறிஸ்தவர்கள் தான் இந்த உலகத்திலே மிகுந்த குற்ற உணர்வோடு இருப்பவர்கள். அநேக சட்டங்கள் நமக்கிருப்பதினாலே நாம் எப்போதும் குற்ற உணர்விலே இருக்கிறோம். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு குற்ற உணர்வைப் போதித்து அழித்து விடுகிறார்கள். ஒரு விடுதலை இல்லை. சந்தோ'ம் இல்லை. ஒருவருக்கொருவர் குற்றம் கண்டுபிடிக்கிறீர்கள். சிறுவயதில் உங்கள் பிள்ளைகள் மேல் நீங்கள் குற்றம் கண்டு பிடித்தால் அவர்கள் பெரியவர்களாகி, உங்கள் மீதும் அதைத்தான் செய்வார்கள். சட்டத்தை கையில் எடுப்பவன் சட்டத்தாலே நியாயந்தீர்க்கப்படுவான். ஆனால் கிருபை அநேகப் பாவங்களை மூடுகிறது. அன்பு திரளான பாவங்களை மூடும்.

எவருடைய பாவம் மூடப்பட்டதோ எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ அவன் பாக்கியவான் என்று தாவீது சங்கீதத்தில் கூறியுள்ளான். தாவீது புதிய உடன்படிக்கையின் மனநிலையில் இருந்தான். அநேக இடங்களில் தாவீதின் சங்கீதங்கள் பழைய உடன்படிக்கையில் பொருந்தாது.

மூடுவது என்றால் என்ன? ஒருவர் விருந்தாளியாக வீட்டிற்கு வரும்போது, அழுக்கானவற்றை மறைப்பதற்காக ஒரு போர்வை எடுத்து மூடுகிறீர்கள். அது அழகாக இருக்கிறது. அது இன்னும் அழுக்குத்தான், ஆனால் மூடப்பட்டிருக்கிறது. யாருடைய பாவம் மூடப்பட்டதோ, யாருடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ அவன் ஆசிர்வதிக்கப்பட்டவன். பாவம் செய்யாதவன் தான் ஆசிர்வாதமுள்ளவன் அல்ல. ஆசிர்வதிக்கப்பட்ட மனிதன் புதிய உடன்படிக்கைப் பற்றிய அறிவுள்ளவன். அவனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவைப் பற்றி அறிந்தவன். அநேகர் ஆசிர்வதிக்கப்படவில்லை. ஏனென்றால் பழைய உடன்படிக்கையிலே நீங்கள் வாழுகிறீர்கள். அதனால் பலன் தேவனுக்கும் இல்லை. உங்களுக்கும் இல்லை. பிசாசுக்குத்தான் அதிலே பலன். உங்கள் இருதயத்தில் குற்ற உணர்வு வருவதைப் பார்த்து அவன் சந்தோ'ப்படுகிறான். உங்கள் இருதயத்தில் வரும் குற்ற உணர்வின் மீது அவன் வந்து அமர்ந்து போஜனம் பண்ணுவான். நீங்கள் இதை புரிந்து கொள்ளும் போது, தேவனோடு இருக்கும் உறவை நீங்கள் அறியும் போது, நீங்கள் உங்கள் டெஸ்டனியை நோக்கி ஓடுவீர்கள்.

உங்கள் அழைப்பை நோக்கி ஓடுவீர்கள். உங்கள் பிரகாசமான வெளிச்சத்தை நோக்கி ஓடுவீர்கள்.

இப்படி நான் பேசினால், பாவம் செய்வதற்கு ஒரு காரணம் கிடைக்க வேண்டுமென்று நினைக்கிறவர்கள் பாவம் செய்வார்கள். மற்றவர்கள், தங்கள் டெஸ்டனியை நோக்கி முழுஉற்சாகத்தோடு ஓட ஆரம்பிப்பார்கள். இப்போது, தேவனுடைய பெலத்தினால் என்னுடைய இலக்கை (டெஸ்டனி) நோக்கி ஓட முடியும் என்று உங்களுக்கு தோன்றும். என்னுடைய பெலவீனத்தின் மத்தியிலும், அங்குமிங்கும் நான் சிறிதாக் கீழே விழுந்திருந்தாலும், தூசியைத் தட்டிவிட்டு ஓடுவேன். ஏனென்றால் கிருபையை நான் நம்புகிறேன். தேவன் என்னை அடிப்பதற்கு காத்துக் கொண்டிருக்கவில்லை. நான் கிருபையை நம்பும் போது, எனக்குக் கிருபை கிடைக்கும். என்னுடைய ஓட்டத்தை கிருபையினால் முடிப்பேன். பழைய ஏற்பாட்டிலே யாராவது ஓட்டத்தை முடிக்கும் போது, அங்கே கிருபை இல்லை. அவன்

நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினதினால் மகிமையை பெற்றுக் கொள்கிறான். பழைய ஏற்பாட்டிலே உங்களுடைய பெலத்தினால், நீங்கள் அதை செய்கிறீர்கள். அங்கே கிருபையே இல்லை. நியாயப் பிரமாணத்தை கிருபையினால் நீங்கள் முடிக்கவில்லை. நீங்கள் அதை கிருபையினால் கிடைத்தது என்று சொல்ல முடியாது. நான் அதை செய்ததினால் எனக்குக் கிடைத்தது.

புதிய ஏற்பாட்டிற்கு வரும் போது கிருபையினால் கிடைத்தது என்று சொல்கிறோம். நான் அதற்கு தகுதியானதினால் அல்ல. நான் சுத்தமானதினால் அல்ல. நான் பரிசுத்தவான் என்பதால் அல்ல. அநேக குறைகள் எனக்கிருந்தாலும், அநேக தோல்விகள் இருந்தாலும், நான் பாவஞ்செய்தாலும் நான் ஓடுகிறேன், நான் முடிக்கிறேன். ஏனென்றால் கிருபை உள்ளது. இப்படி நீங்கள் ஓட ஆரம்பிக்கும் போது, நீங்கள் அதை மேற்கொள்ளும்படியான பெலத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். ஆவியிலே அந்த பெலத்தை நீங்கள் பெறுவீர்கள். காரியங்கள் மாறும். பரிசுத்த ஆவியானவர் வரும்போது, நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் என்ற வசனத்தை தேடி வாசியுங்கள். அதற்கு கீழுள்ள நான்கைந்து வசனங்களை நீங்கள் படிக்கும் போது, புரிந்து கொள்வீர்கள். பரிசுத்த ஆவியானவரிடம் உங்களை நான் ஒப்புக் கொடுக்கிறேன். ஆவியானவர் உங்களை பெலப்படுத்துவாராக. நாம் புதிய வரு'த்திற்குள் நுழையும் போது, மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும், அன்போடும், குற்றஉணர்வில்லாமலும், நியாயத்தீர்ப்பு இல்லாமலும் இயேசுவின் நாமத்தில் நுழைவோம். ஆமென்.

# புதிய உடன்படிக்கை-2

## எவர்களுடைய பாவம் மூடப்பட்டதோ அவர்கள் பாக்கியவான்கள்

தேவனுடைய சமூகத்திலே ஒதுக்குகிற நேரம் எதுவும் வீணாகாது. உங்கள் விசுவாசத்தையும், பலிகளையும் தேவன் கணம்பண்ணுகிறார். விசுவாசத்தினால் தேவனுடைய சமூகத்தில் இருக்க முயற்சிக்கிறீர்கள். இந்த புதிய வருடத்திலே தேவனுடைய நன்மையையும், கிருபையையும் நாம் கொண்டாடுவோம்.

புதிய உடன்படிக்கையைக் குறித்த நல்ல நிச்சயம் நமக்கிருக்க வேண்டும். இந்த சத்தியத்தை நாம் தெரியாத பட்சத்தில், பிசாசானவன் நம்முடைய இருதயத்தில் எளிதாக ஏமாற்றத்தை வைக்க முடியும். நாம் தேவனுடைய பார்வையிலே நல்ல வாழ்க்கை வாழ முயற்சிக்கிறோம். ஆனால் பிசாசிற்கு நம்முடைய பெலவீனம் என்ன? என்பது தெரியும். எல்லா நேரங்களிலும் நம்மை எப்படி கீழே இழுப்பது என்பது அவனுக்குத் தெரியும். நாம் கொஞ்சம் கீழே வழுக்கிறமாதிரியான சூழ்நிலையை அவன் உருவாக்கும் போது, உடனே ஒரு குற்ற உணர்வை நம்முடைய வாழ்க்கையில் வைத்து அவன் விளையாட ஆரம்பிப்பான்.

இரண்டு விதமாக பிசாச நம்முடைய வாழ்க்கையில் கிரியை செய்கிறான். முதலாவது இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலிருந்து நம்மை அகற்றி வைக்க முயற்சிப்பான். அந்த யுத்தத்திலே அவன் நம்மிடம் தோற்றுவிட்டான். ஏனென்றால் நாம் இயேசுகிறிஸ்துவுக்குள் வந்திருக்கிறோம். இரண்டாவது, வாழ்க்கை முழுவதும் அவனோடு யுத்தம் பண்ணிக் கொண்டேயிருப்பது. தேவனுடைய அன்பை நாம் உணருவதை நம்மிலிருந்து எடுத்துப் போட முயற்சிப்பான். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பைக் குறித்த நிச்சயத்தை நம்மிலிருந்து நீக்கி வைக்க முயற்சிக்கிறான். அதிலே அவன் வெற்றி அடையும் போது, நம்முடைய அற்புதத்திலிருந்தும், நம்முடைய டெஸ்டனியிலிருந்தும் எளிதாக நம்மை திசை திருப்பிவிட முடியும். அதற்காகவே நம்முடைய இருதயங்களில் குற்ற உணர்வை உண்டாக்க முயற்சிக்கிறான். நாம் குற்ற உணர்வடைந்தவுடனே, நாம் வழக்கமாக ஜெபிக்கிற விதமாக அல்லாமல், நம்முடைய ஜெபம் வித்தியாசமாக இருக்கும். ஜெபங்களிலே குற்றஉணர்வு, சந்தேகம், பயம் அனைத்தும் சேர்ந்திருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தை பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து கண்டித்து உணர்த்துவார் என்பதை வாசிக்கச் சொன்னேன். **சங்கீதம் 32யை** நாம் வாசிப்போம்.

1 **எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.**

2 **எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.**

3 **நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.**

4 **இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால் என் சரீரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. (சேலா.)**

5 **நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன் என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன் தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.(சேலா.)**

6 **இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான் அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.**

7 **நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர் என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். (சேலா.)**

8 **நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணை வைத்து,உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

9 **வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.**

10 **துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்.**

**11 நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள் செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள்.**

இது மிகவும் முக்கியமான பாடம். உங்களுடைய விசவாசம் நான் கற்பிக்கிற சகலத்திலும் உறுதியாயிருக்கும்படி, ஒரு காரியத்தையும் மறைக்காமல் சொல்லப் போகிறேன். ஒவ்வொரு வசனத்தையும் விளக்கி சொல்லப் போகிறேன். அப்போது ஒரு சந்தேகமும் இருக்காது. இந்த சத்தியத்தை நீங்கள் அறியும் போது, இந்த புதிய வரு'த்திலே தேவன் உங்களை விடுதலையாக்குவார். அநேக கிறிஸ்தவர்களுக்கு இந்த சத்தியம் தெரியாது. அநேகர் இன்னும்கூட பழைய ஏற்பாட்டில் உள்ள கட்டளையின்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆசிர்வாதமாக நாம் இருப்பது, இதற்கு முன்னால் நடந்த ஏதோ ஒன்றின் உற்பத்தி. பழைய ஏற்பாட்டிலே, கட்டளைகளின் படி செய்தால் நீங்கள் ஆசிர்வதிக்கப் படுவீர்கள். நீங்கள் அதற்கு கீழ்ப்படியாமல் இருந்தால் சபிக்கப்படுவீர்கள். சங்கீதக்காரனாகிய தாவீது தீர்க்கதரிசனமாக புதிய ஏற்பாட்டைப் பற்றி சொல்கிறார். ஏனென்றால் இந்த இடத்திலே அவர் பேசியிருப்பது பழைய உடன்படிக்கைக்கு பொருத்தமே இல்லை. அந்நாட்களின் படி பார்த்தால் அவர், தேவ தூ'ணம் பண்ணுகிறார்.பழைய ஏற்பாட்டிலே பாவத்திற்கு மன்னிப்பே இல்லை. லேவியராகமத்திலே, பாவ நிவாரண பலி, பாவ மன்னிப்பு என்ற வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. மிருகங்களைப் பலி கொடுப்பது போல, குற்ற நிவாரணபலி, பாவநிவாரண பலி என்று படித்திருக்கிறோம்.

கற்பனையை மீறினதினிமித்தம் சகோதரன் க'டப்படுவது தான் மீறுதல். பாவம் என்பது தேவனுடைய கற்பனையை மீறுவது. ஒருவன் ஒரு கொலை செய்துவிட்டால் அது அந்த வீட்டிற்கே சாபம். அது தேவனுக்கு விரோமான பாவம். பழைய ஏற்பாட்டின்படி, நீங்கள் யாரையாவது கொலை செய்து விட்டால் தேவனுடைய ஆலயத்திற்கு ஓடி, அங்கே உள்ள பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக் கொண்டு கிருபை, கிருபை என்று அழலாம். அங்கேயுள்ள ஆசாரியன் சில காரியங்களை செய்யும் போது, அவனுடைய பாவம் மன்னிக்கப்படும். அந்தக் குடும்பமும் மன்னித்து விடும். ஆனால் மனப்பூர்வமாக ஒரு பாவத்தை செய்தால் அந்தப் பாவம் மன்னிக்கப்படாது. எவ்வளவு அதிகமாக பலி செலுத்தினாலும் உங்கள் பாவம் மன்னிக்கப்படாது. அது மூடப்படும்.

லேவியராகமம் 4:20 **பாவநிவாரணபலியின் காளையைச் செய்தபிரகாரம் இந்தக்காளையையும் செய்து, இவ்வண்ணமாய் ஆசாரியன் அவர்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் அப்பொழுது அது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.**

பாவநிவாரண பலி என்பதால், அவனுடைய செயல் மன்னிக்கப் படும். ஆனால் புதிய ஏற்பாட்டிலே, பவுல் எபிரேயருக்கு எழுதுகிறார்.

எபிரேயர் 10:4 **அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.**

என்று பவுல் தெளிவாக சொல்கிறார். லேவியராகமம் ஒன்றை சொல்கிறது. எபிரேயர் ஒன்றை சொல்கிறது. எனவே நாம் இன்னும் ஆழமாக ஆராய வேண்டும். பாவநிவாரண பலி என்பது, எபிரேய பாஷையிலே 'க.ஃ.பா' என்று எழுதப்பட்டுள்ளது. 'க.ஃ.பா'என்றால் மூடுவது என்று அர்த்தம். பாவநிவாரணம் என்றால், ஒரு மனிதனை இரத்தத்தால் மூடுவது. அது தான் பாவநிவாரணம். பவுல் சொல்கிறார், மிருகத்தின் பலி பாவத்தை மாற்றாது. பழைய ஏற்பாட்டிலே, பாவங்கள் மூடப்பட்டது. புதிய ஏற்பாட்டிலே பாவங்கள் எடுத்துப் போடப்பட்டது. இயேசு உங்கள் பாவத்திற்காக பாடுபட்டார். அந்த பாவத்தை எடுத்து, அதினால் அவர் துன்னபப்பட்டார். நாம் செய்து முடித்த பாவத்திற்கு மட்டுமல்ல. இனிமேல் செய்யப் போகிற பாவத்திற்காகவும் அவர் மரித்தார். இதன் அர்த்தம் நியாயப்பிரமாணத்திற்கு இதின் மீது அதிகாரம் இல்லை. ஆகையால் நீங்கள் செய்வது நியாயப்பிரமாணத்தின் படி எண்ணப்படாது. அது உங்கள் மேல் சாபத்தைக் கொண்டு வராது. நீங்கள் பாவஞ் செய்யுங்கள் என்று நான் சொல்லவில்லை. உங்கள் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கும்படிக்கு பிசாசு கொண்டு வருகிற எல்லா காரியங்களையும் சொல்கிறேன். நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவ ஆவியானவர் எழுதின சத்தியத்தை மட்டும் தான் நான் சொல்லுகிறேன்.

**யோவான் 16**

8.**அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.**

**9.அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,**

**10. நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,**

**11. இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.**

பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும் போது, அவர் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவார். என்று தான் முன்னொரு நாள், தேவன் நம்முடைய கண்களை திறக்கும் வரைக்கும் நாம் நினைத்தோம். ஆனால் அதுவல்ல சத்தியம், தேவன் சொல்வதை நான் உங்களுக்குப் போதிக்கிறேன். பரிசுத்த ஆவி வரும் போது, பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவார். நீதியைக் குறித்துக் கற்றுக் கொடுப்பார். நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசுவார்.

பழைய ஏற்பாட்டிலே உலகத்திற்கு பாவம் என்ன என்பதை கற்றுக் கொடுப்பார். ஏனென்றால் உலகத்திற்கு இயேசுவைப் பற்றித் தெரியாது. அவிவிசவாசிகளின் இருதயத்திலே அவர் கிரியை செய்வார். ஏனென்றால் அவர்களுக்கு பாவம் என்ன என்பது தெரியாது. ஆனால் புதிய ஏற்பாட்டிலே இயேசுவை தெரியாமலிருப்பதே பாவம். ஒரே பாவம் உங்கள் மேல் தேவனுடைய கோபத்தைக் கொண்டு வரலாம். அதின் சாபம் தேவனுடைய சமூகத்திலிருந்து உங்களை வெளியேற்றும். இயேசுகிறிஸ்துவின் ஆவியை ஏற்றுக் கொள்ளாமல், வேறே ஆவியை ஏற்றுக் கொள்வது மட்டுமே தேவனுடைய கோபத்தைக் கொண்டு வரும்.

ஆதியாகமத்திலே பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைப் பாருங்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, அவர்களின் குமாரர்கள் நியாயப்பிரமாணத்தின் படி பாவம் என்று சொல்லப்படுகிற அநேக காரியங்களை அவர்கள் செய்தார்கள். ஆனால் தேவன் அவர்களை நியாயந்தீர்க்கவில்லை. தேவன் அவர்கள் மேல் கோபமாக இருக்கவில்லை. இயேசுவின் ஆவியை பின்பற்றாதவர்களின் மீது மட்டுமே அவர் கோபமாக இருந்தார். பரலோகத்தில் தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்று அழிந்து போன பிசாசு லூசிபர் ஆவியை பின்பற்றுகிறவர்களின் மேலே தேவன் எதிர்த்து நிற்கிறார்.

அசுத்த ஆவிக்கு நம்முடைய பெலவீனம் தெரியும். நம்மை தொந்தரவு செய்யும். அதற்காக தேவனுடைய கோபம் நம்மேல் வராது. பிசாசின்

மேல் தேவனுடைய கோபம் இருக்கும். நீங்கள் அவிசுவாசிகளுடன் பேசும் போது, ஒரு வார்த்தை அல்லது ஒரு படம் அல்லது பாடலின் மூலமாக ஆவியானவர் அவனுடைய உள்ளத்திலே இயங்கி, முதலாவது காரியம் அவன் இயேசுவினிடத்தில் வரும் போது அவன் தன்னை பாவி என்று உணர்வான். பரிசுத்த ஆவியானவர் அவன் பாவி என்ற உணர்வை அவனிடத்தில் தூண்ட வேண்டும். அது தான் முதற்காரியம். பரிசுத்த ஆவியை தன் இருதயத்திலே கிரியை செய்ய விடாமல், தான் பாவி என்று தெரிந்து கொண்டேயிருப்பவர்களை ஒன்னும் செய்ய முடியாது. ஒரு நபரை வியாதியஸ்தன் என்று சொல்லாத வரைக்கும் மருத்துவர் சிகிச்சை தர முடியாது. அவர் நோயுள்ளவர் என்று அவரை ஒத்துக் கொள்ள வைத்தால் தான் மருத்துவர் சிகிச்சையளிக்க முடியும். பரிசுத்த ஆவியின் முதல் வேலை பாவி என்று உணர்த்துவது. இயேசுவிற்குள் வந்த பிறகு உங்களுக்கு பாவத்தைக் குறித்து உணர்த்த மாட்டார். ஏனென்றால் பாவமில்லை. நமக்குள் நீதியைக் குறித்துக் கற்றக் கொடுக்கிறார். ‘நான் பிதாவினிடத்தில் செல்கிறதினால் நீங்கள் என்னைக் காண மாட்டீர்கள்’என்று இயேசு கூறினார். சரீரப்பிரகாரமாக சீ‘ர்களை ஆறுதல் படுத்தினார். பரிசேயர்கள் வந்து சீ‘ர்களை தாக்க முயற்சித்தபோது, ‘நீங்கள் ஓய்வு நாளில் புசிக்கிறீர்கள்’ என்று பல காரியங்களை சொன்ன போது, இயேசு இடைப்பட்டு அவர்களை ஆறுதல் படுத்தினார். நியாயப் பிரமாணத்திற்கு வெளியில் இருந்தாலும்கூட நீதியுள்ளவன் என்று அவர் நமக்கு சொல்வார்.

மூன்றாவது காரியம், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்படுவான். பரிசுத்த ஆவி நமக்கு விரோதமாக பிசாசு வரும் போது அவனுக்கு விரோதமாக எழும்பி, ‘நீ நியாயந் தீர்க்கப்படுவாய்’என்று பிசாசிற்கு ஞாபகப் படுத்துவார். நீங்கள் அந்நிய பாஷையிலே பேசும் போது, பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆத்துமாவிலே இயங்கி நீங்கள் பெலவானாய் மாறுவீர்கள். ஏனென்றால் நீதியினுடைய எண்ணம் உங்களுக்குள் வருகிறது. நீங்கள் வித்தியாசமாக உணருவீர்கள். தேவன் உங்களை நேசிக்கிறார் என்பது போல தோன்றும். ஏனென்றால் உங்கள் ஆத்துமாவை நீதியைக் குறித்து அவர் உணர்த்துகிறார். அதே நேரத்திலே அசுத்த ஆவிகளுக்கு, உன்னுடைய முடிவு வருகிறது என்று ஞாபகப்படுத்துகிறார்.

உலகத்திற்கு பாவத்தைக் குறித்து உணர்த்துகிறார். நமக்கு நீதியைக் கற்றுக் கொடுக்கிறார். உலகத்தின் அதிபதிக்கு நியாத்தீர்ப்பைக் குறித்து சொல்கிறார்.

இயேசுவை ஏற்றுக் கொள்ளாததை தவிர வேறே பாவமில்லை. அது உண்மை. யோவான் சொல்கிறார், உங்களுக்குள் பாவமில்லை என்று சொன்னால் நீங்கள் பொய்யன். பாவமிருக்கிறது. மன்னிக்கப்படுகிற பாவம் இருக்கிறது. மன்னிக்கப்படாத பாவமும் இருக்கிறது. நான் சொன்னேன் பாவம் இல்லையென்று. எதற்காக அப்படி சொன்னேன்? நீங்கள் யோசிக்க வேண்டும்? நாம் எப்போதுமே ஒரு பாவ உணர்வோடு இருக்கிறோம். நாம் கீழே விழுகிறது கூட பாவம். ஆனால் அந்த நொடியிலே இயேசுவே என்னை மன்னியும் என்று சொல்வோம். அப்போது நாம் மன்னிக்கப் படுகிறோம். பாவத்தினிமித்தம் பழைய ஏற்பாட்டிலே தேவனுடைய சமூகத்தை நாம் இழந்த போது, அந்தப் பாவத்தை நீங்கள் நினைக்காதீர்கள். அது இன்றைக்கு பாவமே இல்லை. பொதுவாக கிறிஸ்தவர்களின் மனதிலே நான் பாவி, தேவன் என்னை தள்ளிவிடுவார், சபித்து விடுவார், வேலை போயிரும், எப்படி நான் தேவனை சந்திப்பேன்? இது தான் நம்முடைய மனதிலே நிரம்பியிருக்கிறது. நாம் இன்னும் பழைய ஏற்பாட்டு மனநிலையிலே இருக்கிறோம். பிசாசிற்கு மிகவும் எளிதாகப் போய்விடும். உனக்கு தகுதியில்லை என்று சொல்லி உன்னைக் கொண்று போடுவான். ஏனென்றால் பழைய ஏற்பாட்டிலே மன்னிப்பே இல்லை. உடனடியாக நீங்கள் மரிக்காவிட்டாலும், உபத்திரவப்படுவீர்கள். பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும் என்று வேதம் சொல்கிறது. எனவே அதிலிருந்து நீங்கள் தப்பிக்க முடியாது. ஆனால் இப்போது தேவனே நான் இந்த காரியத்தை செய்து விட்டேன் என்னை மன்னியும் என்று சொல்லும் போது உடனே மன்னிக்கப்பட்டுவிடுகிறது.

தேவனுடைய அன்பைவிட்டு, அவருடைய பிரசன்னத்தை விட்டு பிரிப்பதற்கு ஒரு பாவமும் இல்லை. ஆனால் ஒரே ஒரு பாவம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது.

உங்களுடைய வாழ்க்கையிலே பாவம் என்ன செய்யும்? இந்த புதிய உடன்படிக்கையிலே தேவன் பாவத்தை உங்களுக்கு விரோதமாக வைத்துப் பார்ப்பதில்லை. எதற்காக அதை பாவம் என்று சொல்ல வேண்டும்? பழைய ஏற்பாட்டின் காரியங்கள் இந்தக் காலத்தின் நிழலாய் இருக்கிறது. தேவன் ஆவியாயிருக்கிறார். ஆவியிலே பாதிப்பை உண்டாக்கவில்லை. ஆனால் மெய்யாகவே ஆத்துமாவில் பாதிப்பை உண்டாக்கும். நம்முடைய சரீரத்தை பாதிக்கும். பொருளாதார விடுதலை ஆவியிலே இருக்கிறது. உங்கள் ஆத்துமாவை நீங்கள் தான் பழக்குவிக்க வேண்டும். உங்கள் சரீரத்தைக் காத்துக்கொள்ளுங்கள் என்று வேதம் கூறுகிறது. ஆத்துமாவை பார்த்துக் கொள்ளாவிட்டால் தேவன் அதை அழித்துப்

போடுவார். ஆத்துமாவிற்கும், சரீரத்திற்கும் நீங்கள் தான் சாட்சி. நீங்கள் புகைபிடித்து, மதுபானம் அருந்திக் கொண்டிருந்தால் உங்கள் சரீரம் கெட்டுப் போகும். பார்க்கிறதெல்லாம் நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் அது பாவம். அதிகமானவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதுதற்கு காரணம், அதிகமான அரிசி சாப்பிடுவதினால் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உங்கள் சரீரத்திற்கு விரோதமாய் நீங்கள் பாவஞ்செய்யும் போது, நீங்கள் உபவதத்திரவப் படுவீர்கள். நீங்கள் பாவஞ்செய்யும் போது உங்கள் ஆத்துமா பாதிக்கப்படும். உங்கள் சந்தோ'ம், அன்பு, சமாதானத்தைப் பாதிக்கும். உங்கள் ஆத்துமா, அன்பு சந்தோ'ம், சமாதானத்தில் இயங்கும் போது தான் முழுதிறமையும் வெளியே வரும். இல்லையென்றால், எப்போதும் பயம், மனஅழுத்தம், கவலை நிறைந்தவர்களாய் இருப்பீர்கள். பாவம் உங்கள் ஆத்துமாவை மேற்கொள்ளும். எல்லாப் பாவமுமே ஆத்துமாவை தொந்தரவு செய்யும்.

தேவனுடைய திட்டம் நீங்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டும். இது தான் ஆவியின் திட்டம். நீங்கள் பாவத்தில் மாட்டிக் கொண்டிருந்தால், இங்கேயே தான் இருப்பீர்கள். உங்கள் முன்னேற்றத்தை இழந்து போவீர்கள். ஏனென்றால் பாவம் தேவனுக்கு விரோதமானது. உங்கள் பாவம் ஆத்துமாவை தாக்கும் போது, தேவன் இயக்க விரும்புகிற விதமாக நீங்கள் இயங்க மாட்டீர்கள். 40 நாட்களில் போய் சேர வேண்டிய இடத்திற்கு 40 வரு'ம் போவீர்கள். நன்றாக சம்பாதிக்கிறீர்கள், ஆனாலும் இன்னும் கடன், மருத்துவர் ரிப்போர்ட்டில் தடுமாறுகிறீர்கள். மற்றவர்கள் நீங்கள் சம்பாதிப்பதில் பாதி தான் சம்பாதிப்பார்கள், ஆனால் வீடு வாங்கி விடுவார்கள், கார் வாங்கி விடுவார்கள் சந்தோ'மாக இருப்பார்கள். ஏன் உங்களால் முடியவில்லை? ஏனென்றால் பாவம். எவ்வளவு வேண்டுமானாலும் நீங்கள் ஜெபிக்கலாம், ஆவி உங்களுக்கு சக்தியளிக்கும். உங்கள் மனதையும், ஆத்துமாவையும் மறுரூபமாகும்படி ஒப்புக்கொடுக்காவிட்டால், ஒரு பட்டாம்பூச்சியைப் போல பறக்க மாட்டீர்கள். அந்த செடியின் இலையை மட்டுமே சாப்பிட்டுக் கொண்டு இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் நீங்கள் தேனை புசிக்க மாட்டீர்கள்.

நான் உங்களை சபிக்கவில்லை. பாவத்தினால் வருகிற காரியங்களை சொல்கிறேன். உங்கள் திறமையை நீங்கள் இழந்து போவீர்கள். எங்கே நீங்கள் போய் சேர வேண்டுமோ, அங்கே போய் சேர மாட்டீர்கள். நீங்கள் மரிக்கும் போது, இயேசுவை நம்பினதினால்

பரலோகத்திற்கு போய் சேருவீர்கள். ஆனால் அங்கே அநேக நிலைகள் (லெவல்ஸ்) இருக்கிறது. அந்த நிலை என்பது நீங்கள் பூமியல் எப்படி இருக்கிறீர்களோ அதைப் பொறுத்தது. நீங்கள் பூமியில் மேற்கொள்கிறவர்களாய் இருந்தால் அங்கே பெரியவர்களாய் இருப்பீர்கள். தேவன் உங்களுக்கு விரோதமாய் இல்லை. இங்கே நீங்கள் என்ன விதைக்கிறீர்களோ அதை அங்கே அறுப்பீர்கள். இயேசுவை நம்பினால் நீங்கள் நரகத்திற்கு போக மாட்டீர்கள். ஆத்துமா கட்டப்பட்டிருக்கும் போது நீங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு நீங்கள் செல்ல மாட்டீர்கள். நீங்கள், பட்டாம் பூச்சியைப் போல் பறந்து தேனைக் குடிப்பேன் என்ற நீங்கள் சொல்வீர்கள். ஆனால் வாழ்க்கை முழுவதும் ஒரு புழுவைப் போல தான் இருப்பீர்கள். நீங்கள் எவ்வளவு தான் கழுகைப் போல பறப்பேன் என்று சொன்னாலும், உங்கள் மனதையும், சரீரத்தையும் ஒழுங்குபடுத்தாத வரைக்கும் அது நடக்காது. தேவனுக்கு விரோதமாய் இருக்கும் போது, நியாயத்தீர்ப்பு இருக்கும். நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய மனதையும், சரீரத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு உதவி செய்யும் என்று தேவனிடத்தில் கேளுங்கள்.

உங்கள் உணர்ச்சியின் படி நீங்கள் சாப்பிடாதீர்கள். உங்கள் ஞானத்தின் படி சாப்பிடுங்கள். வாழ்வதற்காக சாப்பிடுங்கள். சாப்பிடுவதற்காகவே வாழாதீர்கள். வாய் உள்ளது என்பதற்காக எப்போதும் பேசிக்கொண்டே இருக்காதீர்கள். எப்பொழுது பேச வேண்டுமோ அப்பொழுது மட்டுமே பேசுங்கள். நீங்கள் உணருகிறபடியெல்லாம் செய்யாதீர்கள். எதை செய்ய வேண்டுமோ அதை மட்டுமே செய்யுங்கள். எப்போதுமே உங்களுக்குள்ளே என்ன வருகிறது என்பதை கவனியுங்கள். நீங்கள் எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கிரியையும் எண்ணப்படுகிறது. நீங்கள் தேடினால் அதை அறிந்துகொள்வதற்கான ஞானத்தை தருவார்.

நீங்கள் திருமணம் ஆகாதவர்களாக இருக்கலாம். ஒருவேளை திருமணமாகி குழந்தைகள் பெற்றவர்களாக இருக்கலாம், உங்கள் வாழ்க்கையில் இன்னும் ஒரு திருப்புமுனை இருக்கிறது என்பதை நான் நம்புகிறேன். நீங்கள் தேவனிடத்தில் கேட்க ஆரம்பியுங்கள். உங்கள் வாழ்க்கையின் காரியங்கள் மாறும். தேவன் உங்களை பெலப்படுத்துவார். நான் வாழ்கிற வாழ்க்கை போதுமென்று நீங்கள் நினைத்தால், நாம் தேவனை ஆராதிப்போம், நாம் மரித்து பரலோகத்திற்குக் கூட செல்வோம். ஆனால் இந்த உலகத்திலே நீங்கள் ஒரு ஜெயமுள்ளவர்களாக இருக்க முடியாது. ஏசாயா 60

மற்றும் 61யை நாம் நம்புவோம். அந்த அதிகாரத்தை திரும்ப, திரும்ப படிப்போம். அதை நீங்கள் நம்பும் போது, உங்களை நீங்கள் ஒழுங்குபடுத்துவதற்கான பெலத்தைப் பெறவீர்கள். உங்கள் கண்கள் திறக்கப்படும். மற்ற காரியங்களெல்லாம் உங்களுக்க பெரியதாக தோன்றாது. உங்கள் முன்னேற்றத்தில் நீங்கள் கவனமாயிருங்கள். ஏசாயா 60 மற்றும் 61யை நீங்கள் நம்பும் போது, உங்கள் வாழ்க்கையில் உள்ள எல்லா பெலவீனங்களையும் மேற்கொள்வதற்கு தேவன் உங்களுக்கு உதவி செய்வார். அதிகாரத்தோடும், மகிமையோடும் புதிய வருடத்திற்குள்ளாக நுழைவீர்கள். தேவனுடைய வல்லமை உங்கள் மேல் இருக்கும். தேவன் உங்களை பெலப்படுத்துவார். தேவன் உங்களை வழிநடத்துவார். நீங்கள் ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வீர்கள். மெய்யாகவே தேவன் உங்களை பெலப்படுத்துவார். நீங்கள் வெட்கப்பட மாட்டீர்கள். நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். மெய்யாகவே ஏசாயா 60 மற்றும் 61ல் சொல்லப்பட்ட காரியங்கள் உங்கள் வாழ்க்கையில் நடக்கும். தேவனுடைய வார்த்தை விருதாவாகப் போகாது. அது எதை செய்து முடிக்க வேண்டுமென்று இருக்கிறதோ அதை செய்து முடிக்கும்.

# புதிய உடன்படிக்கை-3

## நமது நீதி அல்ல தேவ நீதியே.

ஆவிக்குரிய உலகத்திலே, இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது, இயேசுவை மறுதலித்து வேறு ஆவியை பின்பற்றுவது மட்டுமே பாவம்.

**1யோவான் 3: 4-6**

4 **பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான் நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.**

5 **அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள் அவரிடத்தில் பாவமில்லை.**

6 **அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை.**

நியாயப்பிரமாணத்தை மீறினால் அது பாவம். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் நியாயப்பிரமாணத்தை மீறுகிற பாவம் உங்களுக்கு இல்லை. நியாயப்பிரமாணத்தில் உள்ள எல்லாவற்றையும் நீங்கள் பின்பற்றினாலும், ஏதாகிலும் ஒன்றை மட்டும் பின்பற்றவில்லையென்றால், அனைத்தையும் பின்பற்றாததிற்குச் சமம். எனவே பழைய ஏற்பாட்டின் காரியங்கள் எல்லாம் பாவம் என்னும் சிறைக்குள் நம்மை அடைத்து வைத்திருக்கிறது என்று பவுல் எழுதுகிறார். அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்து கொண்டேயிருக்க மாட்டான். என்னுடைய ஊழியத்திலும் பாவஞ்செய்து கொண்டேயிருந்த சிலரை நான் விடுவித்திருக்கிறேன். மனதின் பெலத்தினால் நீங்கள் அதை மேற்கொள்ளலாம்.

சிலர் அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு இருப்பார்கள். அவர்களுக்குத் தேவனைத் தெரியாது. ஒருவேளை அவர்கள் சபையில் இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் அவர்கள் பாவஞ்செய்து கொண்டேயிருப்பார்கள், ஏனென்றால் வேறே (அட்மாஸ்பியரிலே) அவர்கள் இயங்கிக் கொண்டேயிருப்பார்கள். பிசாசு அவர்களுக்குள் கிரியை செய்வான்.

1யோவான் 4:15

15 **இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.**

16 **தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார் அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.**

இதை அறிக்கை செய்யும் போது, இயேசு அவனுக்குள் வந்து விடுகிறார். தேவன் அவனுக்குள் வாசம் பண்ணுகிறார். நாம் தேவனிடத்தில் சேருவது நம்முடைய அன்பினிமித்தம் அல்ல. அவர் நம்மேல் வைத்த அன்பினிமித்தமே.

நான் இளைஞனாயிருக்கும் போது, நீ ஒவ்வொரு முறை பாவஞ்செய்யும் போதும் கிறிஸ்துவின் கையில் ஆணி அடிக்கப்படுகிறது என்று சொல்லி பரிதாபப்பட வைப்பார்கள். சிலரெல்லாம் உங்களுடைய பிள்ளைகளின் ஆத்துமாவை இரட்சிக்கும்படியாக, ஆர்வக்கோளாரில் வீணான காரியங்களைப் போதித்து பிசாசிற்கு வழிவிடுகிறீர்கள். பிள்ளை குற்ற உணர்விலே இருக்கும் போது பிசாசிற்கு வழிவிடுகிறது. நீங்கள் கவலைப்பட வேண்டிய ஒரே பாவம் இயேசுவின் பிரசன்னத்தை நீங்கள் நிராகரிப்பது. மற்ற எல்லாமே நீங்கள் கீழே விழும்போது, எழும்பி திரும்ப ஓடுவதைப் போலத்தான்.

பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் அதிகமாக இருக்கிற இடத்திலே நியாயத்தீர்ப்பு உடனே வரும். குறைவாக இருக்கிற இடத்திலே தாமதமாக வரும். எனவே தான் நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலிருந்து ஆரம்பிக்கும் என்று வேதம் சொல்கிறது.

புதிய ஏற்பாட்டிலே அனனீயாவும், சப்பீராளும் பேதுருவினிடத்தில் பொய் சொன்ன போது அவர்கள் உடனடியாக மரித்தார்கள். பழைய ஏற்பாட்டிலே, சிறுகுழந்தைகள் எலியாவைப் பார்த்து, மொட்டைத்தலையனே ஏறிப்போ என்று சொன்ன போது, கரடி வந்து பட்சித்துப் போட்டது. ஒருவன் தேவனுடைய பிரசன்னத்தில் அதிகமாக இருக்கும் போது, ஆசிர்வாதமோ, சாபமோ உடனடியாக வரும். தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும் போது, அசுத்த ஆவிகள் நிற்க

முடியாது. ஆசாரியன் ஆலயத்தின் வெளியிலே என்ன வேண்டுமானாலும் செய்யலாம். வெளிப்பிரகாரத்திலும், உட்பிரகாரத்திலும் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும் போது அவன் அசுத்தமானவனாய் இருந்தால் உடனே இறந்து விடுவான்.

தேவன், எரிகோ சபிக்கப்பட்ட இடம். எனவே அதிலுள்ளவைகள் யாவும் சபிக்கப்பட்டது. அதிலிருந்து எடுக்கும் எல்லா வெள்ளியையும், பொன்னையும் ஆசாரியனிடத்தில் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் ஒரு மனிதன் அதற்குக் கீழ்ப்படியவில்லை. அவன் தன் கூடாரத்திற்கடியில் அதை புதைத்து வைத்தான். தேவன் அதை யோசுவாவிற்கு வெளிப்படுத்துகிறார். உடனே அவன் கொலை செய்யப்பட வேண்டியதாயிற்று. கீழ்ப்படியாமை என்ற சின்ன பாவம்கூட நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்துவிடும். அதைத்தான் நியாயப்பிரமாணமும் சட்டமும் சொல்கிறது.

ஆபிரகாம் தன்னுடைய மனைவியை சகோதரி என்று சொல்லி விற்று விட்டார். ஒருமுறை அல்ல. இரண்டு முறை. இரண்டு முறையும் தேவன் ஆபிரகாமுக்கு சப்போர்ட் பண்ணினார். அவளை அழைத்து சென்ற இரண்டு பேருமேஇ “ஆண்டவரே நாங்கள் என்ன செய்தோம்?” என்று கேட்டபோது, அவர்இ “அவளைத் திருப்பி அனுப்பி விடு” என்றார். அவளைப் பெற்றுக்கொள்வதற்கப் பணம் கொடுத்தார்கள். இப்போது திருப்பி அனுப்பும் போதும் பணம் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் சரியில்லையென்றாலும், இதிலே நீதியென்னவென்றால் ஆபிரகாம் தேவனை அறிந்திருப்பதுதான்.

ஈசாக்கும் இதைத்தான் செய்தான், தன் மனைவி ரெபெக்காளிடம், அவர்கள் உன்னை கூப்பிட்டால் நீ சென்று விடு நான் உன்னை சகோதரி என்று சொல்லி விடுவேன் என்றான். அவளை அழைத்து சென்ற அபிமலேக்கின் வீட்டில் தேவன் நோயை உண்டாக்கினார். ஈசாக்கு வந்து ஜெபித்த பின் தான் சுகம் கிடைத்தது.

யாக்கோபுடைய ஒரு குமாரனின் பெயர் யூதா. யாக்கோபின் ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு கோத்திரமாக மாறினார்கள். யூதா கோத்திரத்திலே இயேசு கிறிஸ்து பிறந்ததினாலே, யூத இராஜசிங்கம் என்று சொல்கிறோம்.

**மத்தேயு 1:3 யூதா பாரேசையும் சாராவையும் தாமாரினிடத்தில் பெற்றான் பாரேஸ் எஸ்ரோமைப் பெற்றான் எஸ்ரோம் ஆராமைப் பெற்றான்.**

தாமார் யூதாவின் மனைவியல்ல. முதல் மற்றும் இரண்டாம் மருமகள். யூதா தன்னுடைய முதல் குமாரனுக்கு தாமாரை விவாகம் பண்ணினான். அவன் மோசமான காரியங்களை செய்ததினால் செத்துப் போனான். அப்போது தாமாரை இரண்டாவது குமாரனுக்கு விவாகம் பண்ணினான். அவனும் தவறு செய்ததால் மரித்துப் போனான். சட்டத்தின்படி அவளை யாரும் இப்போது திருமணம் செய்ய முடியாது. அவள் தன்னுடைய தகப்பனுடைய வீட்டிலிருக்கிறாள். ஒரு நாள் யூதா ஒரு வழியாகப் போகும் போது ஒரு விபச்சாரி வழியருகிலே தன் முகத்தை மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன், இவளை அஸ்ரோத் ஆலய விபச்சாரி என்று நினைத்தான். அவன் அவளிடத்தில் சென்றான். அப்போது இதற்கு பதிலாக உனக்கு என்ன தரவேண்டும் என்று கேட்டான், அவள் ஒரு ஆட்டுக்குட்டியைத்தாரும் என்றாள். ஆட்டுக்குட்டிக் கிடைக்கிற வரைக்கும் உம்முடைய கோலையும், மோதிரத்தையும் தாரும் என்றாள். உடனே அவன் அவைகளைக் கொடுத்துவிட்டுச் சென்று விட்டான்.

ஒரு நாளைக்குப்பின் ஒரு ஆட்டை அனுப்பி விட்டு தன் மோதிரத்தைத் திரும்பப் பெறும்படி முயற்சிக்கிறான். அப்போது அந்தப் பெண் அங்கேயில்லை. ‘இங்கேயிருந்த கோயில்தாசி எங்கே?’ என்று அவன் எல்லாரிடமும் விசாரித்தான். அப்படியாருமில்லை என்றார்கள். பின் அதை மறந்து விட்டான். சிலநாட்கள் கழித்து, மருமகள் கர்ப்பமாய் இருக்கிறாள் என்ற செய்தி யூதாவிற்கு வருகிறது. அப்போது அவன் அவள் யாருடனோ விபச்சாரம் செய்திருக்கிறாள் அவளை எரித்துக் கொல்ல வேண்டுமென்று சொல்லி, எல்லா முதியவர்களையும் கூட்டி அவளை வீட்டிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வாருங்கள் என்றான் அவள் வெளியே வருவதற்கு முன்பாக கோலையும், முத்திரையையும் அவனிடத்தில் அனுப்புகிறாள். அவளுக்குத்தான் சாரா, பாரேஸ் என்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள்.

யூதாவிற்கு இன்னொரு மகன் இருந்தான். சட்டத்தின்படி இவளை மூன்றாம் மகனுக்குக் கொடுத்திருக்க வேண்டும். இரண்டு குமாரனைக் கொடுத்து, அந்த இருவரும் இறந்து போனதினாலே, மூன்றாம் குமாரனைக் கொடுத்தால், அவனும் இறந்து போய்விடுவான் என்று நினைத்து அவளை யூதா நிராகரித்தான். ஆனால் தாமார் ஏதோ ஒன்றை நினைத்தாள், அவள் தன் மருமகள் என்று தெரியாமலே அவளிடத்தில் சேர்ந்து குழந்தைகளைப் பெற்றது வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. சட்டத்தின் படி அதற்கு வேறே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தேவன் அதை மதிக்கிறார்.

பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருக்கும் போது, அன்பு, சந்தோ'ம், சமாதானம், நீடிய பொறுமை போன்ற ஆவிக்குரிய கனிகளைக் கொண்டு வரும். அது உங்களை பரிசுத்தமாக்கும்.

உங்கள் பாவத்ததைப் பார்க்கிலும் அவர் உங்களை அதிகமாக நேசிக்கிறார் என்று நீங்கள் தேவனை நம்ப வேண்டும். தேவன் உங்களை அதிகமாக நேசிக்கிறார், அவருடைய உறவுக்குள் நீங்கள் இருக்கும் போது, அவர் உங்களை உருவாக்கி வழிநடத்துவார். நீங்கள் வெற்றியின் மேல் வெற்றியடைவீர்கள்.

# தேவ ஆவியால் வழிநடத்தப்படுவோம்

இயேசு செய்த அநேக அற்புதங்கள் மற்றும் அவர் தன் சீ'ர்களிடம் பேசிய அநேக ஆவிக்குரிய உண்மைகள் வேதத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆனாலும் எனக்குக் கற்றுக் கொடுக்க ஆவியானவர் இருப்பதால் நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன். இயேசு சில ஆழமான காரியங்களை நிக்கொதேமு என்பவரிடம் பேசினார். அவை யோவான் சுவிசே'த்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே யோவான் மட்டுமே சில ஆழமான காரியங்களை எழுதியுள்ளார். மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா இவர்களெல்லாரும் காரியங்களை வெவ்வேறு பரிமாணங்களில் எழுதியுள்ளார்கள். உதாரணமாக, மத்தேயு இயேசுவின் பரம்பரைக் குறித்தும், லூக்கா அவரது பெற்றோர் மற்றும் பிறகாரியங்களைக் குறித்தும் எழுதியுள்ளார்கள். ஆனால் யோவானோ ஆதியிலே வார்த்தை இருந்தது என்று வேறு பரிமாணத்தில் துவங்கி உள்ளார்.

இயேசு நிக்கொதேமுவிடம் பேசிய காரியங்களைக் குறித்து விவரமாகப் பார்ப்போம். நிக்கொதேமு என்ற பரிசேயன் இருந்தான். பரிசேயன் என்றால் சட்டத்தில் கற்று தேறினவர்கள், ஆனால் உயிர்தெழுதலில் நம்பிக்கையற்றவர்கள். யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு இராத்திரியிலே இயேசுவினிடத்திற்கு வந்தான். அவன் தான் இயேசுவோடு இருப்பதை காண்பிக்க விரும்பவில்லை. ஆனால் இயேசுவிடம் பகிரக்கூடிய ஏதோ ஒன்று இருப்பதை அறிந்திருந்தான். அவன் இயேசுவினிடத்தில் வந்து, “ரபீ, (போதகரே) நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடனே, தேவனிராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான். அவன் இயேசுவே, பாராட்டும் விதமாக உரையாடலை துவங்குகிறான். ஆனால் இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்று பதிலளித்தார். இது எவ்வாறு தோன்றுகிறதென்றால் நிக்கொதேமு எதுவும் கேட்கவில்லை.

இயேசுவே தேவனிடத்தில் இருந்து வந்தார் என்றும் நீர் செய்யும் காரியங்கள் தேவனிடத்தில் இருந்து வந்த ஒருவரேயன்றி வேறுயாரும் செய்ய முடியாது என்றும் பாராட்டத்தான் செய்தான். ஆனால் இயேசுவோ, நிக்கொதேமுவின் உள்ளத்தைப் பார்த்தார். உண்மையில் நிக்கொதேமு இரவில் இயேசுவைப் பாராட்ட வரவில்லை. இயேசுவிடமிருந்து பெற்றுக் கொள்ள வந்திருந்தான்.

நீங்கள் பேசும் வார்த்தையில் அல்ல. உங்கள் இருதயத்தின் வாஞ்சைகளை தேவன் பார்க்கிறார். அதைத்தான் நாம் பரிசுத்தமாகுதல் என்கிறோம். பரிசுத்தமாக்குதல் என்பது, தேவனிடத்தில் நம்மை ஒப்புக்கொடுத்து, அவரிடத்தில் “தேவனே இது என் வாஞ்சை. இது என் ஏக்கம்”என்பது. நான் வேறுவிதத்தில் இயங்கினாலும், வேறுவிதத்தில் நான் காரியங்கள் செய்தாலும், இருதயத்தின் வாஞ்சையை இயேசு பார்த்தார். நிக்கொதேமு கேட்டதற்கும் இயேசுவின் பதிலுக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஒருவன், மறுபடியும் பிறக்காவிட்டால், தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்றார் நிக்கொதேமு சட்டத்தை நன்றாக அறிந்தவன். ஆனால் சட்டத்தில், மறுபடியும் பிறப்பது குறித்தும் ஒன்றுமில்லை.

**யோவான் 3:4-8**

4 **அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்.**

5 **இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.**

6 **மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.**

7 **நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்.**

8 **காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறதுஇ அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.**

இயேசுவோ நீ மறுபடியும் பிறக்க வேண்டுமென்றார். அதுவும் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்றார். நிக்கொதேமுவிற்கு ஒன்றும் புரியவில்லை. மாம்சத்தினால் பிறப்பது என்ன? ஆவியினால் பிறப்பதென்ன? அவனுக்கு ஆதியாகமம், யாத்திராகமம், போன்ற எல்லா ஆகமங்களும் நன்றாகத் தெரியும்.

யோவான் 3: 10 மற்றும் 11

10 **இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?**

11 **மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறோம், நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.**

இதை சபை அடிக்கடி உலகத்திற்குச் சொல்ல வேண்டுமென்று நான் உணருகிறேன். இயேசு இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பே இதைக் கூறியுள்ளார். ஆனால் இன்று, அநேக ஆவிக்குரிய மக்கள், இந்த வசனத்தை உலகத்திடம் அடிக்கடி சொல்ல வேண்டும்.

யோவான் 7: 50, 51

50 **இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்களை நோக்கி:**

51 **ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா என்றான்.**

நம்முடைய தேவன் ஒருவன் சொல்வதைக் கேட்டகாமல் மதிப்பீடு செய்வதில்லை என்று சொல்லி இயேசுவிற்காக நிக்கொதேமு வாதாடினான். அவன் இயேசு கைது செய்யப்படும் சூழ்நிலையிலிருந்து காப்பாற்ற முயற்சிக்கிறான்.

**யோவான் 7: 48 ல் வாசிப்பது போல அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?**

49. **வேதத்தை அறியாதவர்களாகியை இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்.**

இயேசு நியாயப்பிரமாணத்திற்குள்ளாய் செயல் படாததே பரிசேயர்களுக்கு இயேசுவோடிருந்த பிரச்சனை. இயேசு வேறுபரிமாணத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அதை பரிசேயர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை அவர்களால், ஜீரணிக்க முடியவில்லை. ஆகவே அவர்கள் இந்த ஜனக் கூட்டமெல்லாம் ஒரு போலியான தீர்க்கதரிசியின் பின்னால் செல்வதாய் நினைத்தார்கள். ஏனென்றால், இந்தக் கூட்டம் நியாயப்பிரமாணத்தின் சட்டத்தை அறியவில்லை. எனவே அவர்கள் சபிக்கப்பட்டார்கள். பரிசேயர் சட்டத்தை அறிந்தவர்கள். ஆனால் இயேசுவோ சட்டத்திற்குள் அல்லது ஆகமங்களுக்குள் இயங்கவில்லை. இயேசு இந்த ஆகமங்கள் எல்லாவற்றையும் விட மேலானவர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் இந்ந ஜனக் கூட்டம் இயேசுவை சுகத்திற்காகவும், அற்புதங்களுக்காகவும், செல்வத்திற்காகவும், ஜெபத்திற்காகவும், வல்லமைக்காகவும் பின்தொடர்வதாக நினைத்தார்கள். பிரச்சனை என்னவெனில் அவர்கள் இயேசுவின் சட்டத்திற்குள் இயங்க விரும்பினார்கள். இன்று சபையானது, பரிசுத்த ஆவியானவரை சட்டத்திற்குள்ளும், ஆகமங்களுக்குள்ளும் வைக்க விரும்பகிறது. இயேசு கிறிஸ்துவின் முதல்வருகையின் முக்கிய நோக்கமே நியாயப்பிரமாணத்தை விட்டு வெளியே வருவதே. அவர் நியாயப்பிரமாணத்தை விட மேலானவர். அவர் சட்டத்தை நிறைவேற்றி, அவரே ஒரு புதிய துவக்கமாகவும், புதிய பிரமாணமாகவும், புதிய ஆட்சிமுறையாகவும் மாறினார். எனவே, சட்டத்தைக் குறித்து ஆவியினால் நடத்தப்படும் வாழ்க்கையை குறித்ததான குழப்பம் இன்று மட்டுமல்ல, பல நாட்களாகவே இருக்கிறது.

யோவான் 3: 10-21

நிக்கொதேமுவின் நோக்கம் என்னவெனில் இயேசு எவ்வாறு இப்படி செயல்படிகிறார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே. இயேசு அவன் இருதயத்தை அறிந்து நீ என்னைப் போல மாற வேண்டுமென்றால் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று சொன்னவுடனே தாயின் கர்ப்பத்தில் பிறக்க முடியுமா என்று குழப்பத்துடன் கேட்கிறான். இயேவு அவனிடத்தில் தாயின் கர்பத்தில் மாம்சமாகப் பிறந்தாய் எனவே மாம்சமாக இருக்கிறாய். நீ மறுபடியும் ஆவியில் பிறந்தால் ஆவியாக மாறுவாய் என்றார்.

நாம் மறுபடியும் பிறப்பது குறித்து நன்றாகக் கற்று இருக்கிறோம். அதாவது இயேசுவை அல்லது இயேசுகிறிஸ்துவின் ஆவியை நம்முடைய ஆவியில் பெற்றுக் கொள்வது. இதன் அர்த்தம் என்னவெனில் நம்முடைய ஆவி நம் தகப்பனாகிய ஆதாமினால் செத்தாயிருக்கிறது. இயேசுவின் ஆவியை நம்முடைய ஆவியில் பெற்றுக் கொள்ளும் போது நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப்படுகிறது. நம்முடைய ஆவி தேவனுடைய ஆவியோடு இணைக்கப்படாதபோது செத்ததாயிருக்கிறது. இப்போது நாம் இயேசுவை நம்முடைய ஆவியில் இணைக்க ஆரம்பிக்கும் போது, மறுபடியும் பிறந்து ஆவியில் உயிர்ப்பிக்கபடுகிறோம். இயேசு கர்த்தரென்று நாம் வாயில் அறிக்கை செய்வதை நம் ஆத்துமா நம்ப வேண்டும். யூதர்கள் இயேசுவை தேவகுமாரனாகவோ, நமக்காக மரிக்க வந்தவராகவோ நம்பவில்லை. ஏனெனில் இயேசுவைக் குறித்து அவர்கள் ஆவியில் பேசப்பட்டிருந்தது, ஆனால் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சீனாய் மலையில் சட்டம் கொடுக்கபட்டபோது கிருபை எடுக்கப்பட்டது. நியாயாதிபதி இருக்கையில் உட்காரும்வரை அவர் தகப்பன். அவர் நியாயாதிபதியாக உட்காரும் போது கிருபையில் இயங்க முடியாது. அவர் சட்டத்திற்கு இணங்க வேண்டும். ஜனங்கள் எகிப்பதிலிருக்கும் போது புதுவிதமான பொருளாதாரத்தில் இயங்கினார்கள். அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறின பின்பு தேவ பொருளாதாரத்தில் இயங்க வேண்டியிருந்தது. விசுவாசத்தினால் வாழ்வதுதான் தேவ பொருளாதாரம். தேவன் ஒன்றுமில்லாமல் சென்ற அவர்களுக்கு கற்பாறையில் இருந்து, தண்ணீரையும், மன்னாவையும் தர முடியும் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் தங்களுக்கு சட்டம் வேண்டுமென்று கேட்டார்கள். எகிப்தின் பொருளாதாரத்தில் இயங்கிக் கொண்டிருந்தார்கள். சிவந்த சமுத்திரத்தைக் கடந்து தேவன்

அவர்களைக் கொண்டு வந்த பின்பும், அவர்கள் ஆவி ஆகமங்களில் தான் இயங்கிக் கொண்டிருந்தது. இன்றும் அநேக சபைகள் ஆகமங்களில் தான் இயங்குகிறார்கள். அவர்கள் ஆத்துமா பழைய எற்பாட்டிலிருந்தது, அவர்கள் மாறவில்லை. அவர்கள் ஆவி தேவனோடு இணைந்திருந்தாலும், அவர்கள் சீனாய் மலைக்குத்தான் செல்கிறார்கள். நாம் தேவபிரசன்னத்தைவிட்டு சொந்த வழியை பின்பற்றும் போது கிருபையை இழந்து சட்டத்தைப் பின்பற்றுகிறோம்.

தேவன் இதை சரிசெய்யத்தான் ஒரே பேறான குமாரனை அனுப்பி சட்டத்தை நிறைவேற்றினார். இயேசு சட்டத்தை முடித்து ஒரு புதிய கிருபையின் காலத்தைத் துவக்கினார். இயேசு சிலுவையில் அறையப்பட்ட அந்த நாளிலே கிருபையின் காலம் துவங்கினது. பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்ட நாளிலே கிருபை அமலுக்கு வந்தது.

நாம் சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினம் கொண்டாடுகிறோம். இயேசு சிலுவையில் அயைப்பட்டது தான் சுதந்திர தினம். குடியரசு என்பது பரிசுத்த ஆவியானவர் கொடுக்கபட்ட நாள். அந்த நாளிலே மூவாயிரம் பேர் இரட்சிக்கபட்டார்கள். நியாயப்பிரமாணம் அல்லது சட்டம் கொடுக்கபட்ட நாளிலே மூவாயிரம் பேர் இறந்தது சரிசெய்யப்பட்டது. சட்டத்தின் படி அவர்கள் தேவனுக்குப் பிடித்தது மற்றும் பிடிக்காததை தெரிந்து கொள்ள விரும்பினார்கள். கிருபையினால் வாழ விரும்பாமல், அதிகாரத்தினால் வாழ விரும்பினார்கள். எனவே தேவன் சட்டத்தைக் கொடுத்தார். ஆனால் அவர்களால் சட்டத்தை பின்பற்ற முடியவில்லை.

நம்முடைய இருதயம் பரிசுத்தமாகும் வரைக்கும் கிருபை உள்ளது. “நீரே என் தேவன் நீரே என் தகப்பன் நான் உம்மைக் கனம் பண்ணுகிறேன். நான் உமக்காய் வாழுகிறேன். உம்மை நம்புகிறேன். உமக்கு மகிமையாய் வாழ விரும்புகிறேன்” என்று சொல்லும் வரை மகிமை உள்ளது. புதிய ஏற்பாட்டின் சபை இன்றும் ஆகமங்களை தேடிசட்டத்தைக் கொண்டு வருகிறது. தேவன் கிருபையின் அடிப்படையில் வாழ நினைப்பூட்டுகிறார். எப்பொழுதும் தீர்ப்பை எதிர்பாராமல் கிருபையை எதிர்பாருங்கள். உங்கள் மனது கிருபையை எதிர்பார்த்தால் “தேவனே என்னை மன்னியும்” என்று சொல்ல மாட்டீர்கள். குற்ற உணர்வு உங்கள் இருதயத்தைப் பாரமாக்கிவிடும். பிறகு நீங்கள் பரிசுத்தத்தை நினைப்பீர்கள். குற்ற உணர்வை

உண்டாக்கி பரிசுத்ததை நினைக்கவைப்பது பிசாசின் தந்திரம். இயேசு நிறைவான வாழ்வைத் தரும்படியும் , சாபத்திலிருந்து விடுவிக்கும்படியும் , சட்டத்தின் பாரத்திலிருந்து நம்மை விலக்கும் படியும் குற்ற உணர்விலிருந்து விடுவிக்கும்படியும் இளைப்பாறுதலைத் தரும்படியும் வந்தார். அவர் நம்மை மாற்றிக் கொள்வதற்குப் பெலன் தந்து, நமக்குள் புது மனதை (ஆத்துமாவை) உருவாக்குவார். புது உடன்படிக்கையின்படி, நான் உனக்குள் புது இருதயத்தை உருவாக்கி, அதில் என் கட்டளைகளை எழுதுவேன் என்று தேவன் சொல்லியிருக்கிறார், அதின் அர்த்தம் உனக்கு தெரிந்தவையெல்லாவற்றையும் விட்டுவிட்டு தேவனின் குரலுக்கு செவிகொடு என்பதே. எனவேதான் இயேசு, ஆவி ஒரு காற்றைப் போன்றதென்கிறார். நிக்கொதேமு சட்டத்தை முழுவதுமாக பின்பற்றினான். அவனால் இயேசு சொன்னதை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆலய வரி வசூலிப்பவர்கள் இயேசுவிடம் வரி கேட்ட போது, இயேசுவால் வாதாடிருக்க முடியும். அவர் அவர்களோடு நாம் ராஜ்ஜியத்தின் பிள்ளைகளல்லவோ நாம் வரிகட்டத் தேவையில்லை என்று சண்டை போட்டிருக்க முடியும். இயேசு இவர்களோடு சண்டைப் போடப் போகிறார் என்று பேதுரு நினைத்திருக்கக் கூடும். ஆனால் இயேசுவோ, அவர்களுக்கு தடையாயில்லாமல் இது சண்டைபோடும் இடம் இல்லை, நான் பணத்திற்காக சண்டை போட வரவில்லை என்று பேதுருவிடம் கடலுக்கு போய் மீனைப் பிடித்து அதின் வாயைத் திறந்து பார். அதில் இருக்கும் வெள்ளிப் பணத்தை உனக்காகவும் எனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

மத்தேயு 17: 24 – 27

**அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து, உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள் செலுத்துகிறார் என்றான்.**

**25 அவன் வீட்டிற்குள் வந்தபோது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார்.**

**26 அதற்குப் பேதுரு: அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் என்றான். இயேசு அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே.**

**27 ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப்போய், தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப்பிடித்து, அதன் வாயைத் திறந்துபார். ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய் அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.**

இயேசுவால் இதை ஒத்துக்கொள்ள முடியாவிட்டாலும், அவர் அதை செய்தார். ஏனெனில் அவர் இதற்காய் வரவில்லை. ஆனால் ஒரு சில சூழ்நிலைகளில், சீஷர்கள் சட்டத்தின் படி நடக்கவில்லை, ஓய்வுநாளில் கதிர்களை உண்டார்கள், சாப்பிடுவதற்கு முன் கைகளை கழுவவில்லை. பரிசேயர்கள் இவற்றைக் குறித்து குற்றம் சாட்டிய போது இயேசுவால் அவற்றைப் பின்பற்றும்படி சீஷர்களிடம் சொல்லியிருக்க முடியும். ஆனால் இயேசுவோ, பரிசேயர்களுக்கு எதிர்த்து நின்றார். ஏனெனில் அவர் வந்ததின் நோக்கம், சட்டத்தை மேற்கொள்வதே. இதெப்படியெனில், பரிசுத்த ஆவியானவர் கை கழுவும்படி சொன்னால், கை கழுவ வேண்டும் சட்டம் சொல்வதற்காக அல்ல. இரண்டு நாள் அல்லது அதற்கு மேலாகிலும் உபவாசம் இருக்கலாம், அது பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலாய் இருந்தால். சட்டத்தின் பிரகாரம் உபவாசம் இருந்தால் அது சரீரத்தின் உபவாசம் மட்டுமே, அப்படியெனில் எதுவும் பேசலாம், எதுவும் பார்க்கலாம் ஆனால் சாப்பிடமட்டும் கூடாது. இது சட்டத்தின் உபவாசம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, அது மிகவும் வித்தியாசமானது. சட்டத்தின்படி காரியங்கள் செய்யப்படுவதில்லை. தேவையில்லாமல் பேசவதில்லை. தேவையற்ற காரியங்கள் பார்க்கப்படுவதில்லை. கவனம் சிதறடிக்கப்படுவதில்லை. நாம் அப்படியே உபவாசத்தில் இருப்போம். சட்டம் இவற்றைக் குறித்து

பேசுவதில்லை. சட்டத்திற்கு இவையாவும் தெரியாது. இவற்றைக் குறித்து பரிசேயரும் அறியவில்லை. இவற்றைத்தான் ஆவியால் நடத்தப்படுவது என்கிறோம். சட்டம் சொல்கிறது எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பாகத்தை ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டும் என்று. நாம் அதைக் கொடுத்தவுடனே, எல்லாவற்றையும் செய்ததாகவும், நாம் சிறந்தவர் எனவும் உணர்கிறோம். பரிசேயரும் பிற சில சிறந்த மனிதரும் தெருவில் நின்று சட்டத்தின்படி அவர்கள் எல்லாவற்றையும் கொடுத்ததாகக் காண்பித்தார்கள். இரண்டு காசு மட்டும் வைத்திருந்த பெண் சட்டத்தின் படி பத்தில் ஒரு பாகத்தைக் கொடுக்காமல் எல்லாவற்றையும் கொடுத்தாள். அது தான் ஆவியினால் நடத்தப்படுவது.

சட்டத்தின்படி நாம் கொடுத்து அதைக் குறித்து பெருமை பாராட்டுகிறோம். ஆனால் ஆவியினால் வழிநடத்தப்படும் போதோ எல்லாவற்றையும் கொடுக்கிறோம். ஆவியினால் நடத்தப்படும் உபவாசத்தில் நாம் வயிற்றை மட்டும் பட்டினி போடுவது இல்லை. ஆனால் மனம், உணர்ச்சி மற்றும் பிற அனைத்தையும் உபவாசிக்கும்படி செய்கிறோம். பத்தில் ஒரு பங்கைக் கொடுப்பது மட்டுமல்லாமல் எல்லாவற்றையும் கொடுக்கிறோம். ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் வேறு பெரிய காரியங்களைக் கற்றுக் கொடுக்கிறார் என நாம் அறிவோம். அநேக சூழ்நிலைகளில் ஆவியினால் வழிநடத்தப் பட்டவர்கள் மகா பெரிய காரியங்களைச் செய்துள்ளனர். இது இயேசு சட்டத்தை அவமானப்படுத்துவதற்காக வந்ததாகத் தோன்றினாலும், அவர் வந்ததின் நோக்கம் நம்மை தேவ ஆவியுடன் இணைப்பதே. அதின் மூலம் நம்மால் அதிகாரத்துடனும் வெற்றியுடனும் சட்டத்திற்கு அடுத்த காரியங்களிலும் நடக்க முடியும். சட்டம் சொல்கிறது யெகோவா தேவன் யூதர்களுக்கு மட்டுமே. பேதுரு சட்டத்திற்கு ஒப்புக்கொண்டிருந்தான். பவுல் கிருபையின் வெளிப்பாட்டை கொண்டு வந்த போதோ, பேதுரு மிகவும் கோபம் கொண்டான். பேதுருவால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை, பேதுரு தலை சவரம் செய்வது, விருத்தசேதனம் குறித்து பேசும் போது பவுல் அந்தப் போதகத்திற்கு எதிர்த்து நிற்கிறார்.

புறஜாதியார்க்கு சுவிசே'ம் பிரசங்கிக்க வேண்டும் என்ற வெளிப்பாடு பேதுருவுக்கு எவ்வாறு கிடைத்தது? பேதுரு ஒரு சொப்பணம் கண்டதினால் சட்டத்தை உடைத்தார்.

புதிய ஏற்பாட்டின் முழு கதையுமே ஒரு கன்னிகை கண்ட கனவின் மூலமே. ஒரு பெண் சொப்பணம் கண்டாள், அவள் ஒரு கன்னி, அவள் குழந்தையைப் பெற்றாள். அவளின் கணவனும் ஒரு சொப்பணம் கண்டு அவளுக்கு ஆதரவாக இருந்தான். பேதுருவும் ஒரு சொப்பணத்தின் மூலம் சட்டத்தை முறியடித்தான். அவன் அசுத்தமான மிருகங்களை உண்ணும்படியான சொப்பணம் கண்டான். அது யூதசட்டத்தின்படி அசுத்தமான காரியம். ஆனால் பேதுருவுக்கோ, சொப்பணத்தில் அதை சாப்பிடும்படி ஆசிர்வதித்துள்ளார் என்று சொல்லப்பட்டது. அது உங்களை பாம்புகளையும், தேள்களையும் சாப்பிடச் சொல்வது போன்றது. அது ஆவியினால் கொடுக்கப்பட்ட சொப்பணம். நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஒரு மருத்துவராகவோ, ஒரு பொறியாளராகவோ உருவாக்கும்படி பயிற்றுவிக்கிறீர்கள். ஆனால் ஒருநாள் திடீரென்று அவர்கள் தேவன் சொப்பணத்தில் வந்தார். நான் ஆப்பரிக்கா அல்லது வடஅமெரிக்காவுக்கு செல்கிறேன் என்று சொல்ல நேரிடும். நான் சமுதாயத்திற்கு என்ன சொல்வேன். பத்து வருடத்திற்கு முன்பாகவே நான் சபையை மாற்றியிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

நான் ஊழியம் செய்ய நினைத்த போது என் சொந்த குடும்பத்திலிருந்தே எனக்குப் பல எதிர்ப்புகள் வந்தன. ஆனால், ஆவியானவர் என்னை இவ்வளவு தூரம் வழிநடத்தியுள்ளார். இப்பொழுது அவர்கள் எல்லாரும் என்னை மதிக்கிறார்கள். நீங்கள் ஊழியக்காரன் என்று நிரூபிக்கும் வரை அவர்கள் பிச்சைக்காரணாகத் தான் கருதுவார்கள். தேவன் நம்மை ஊழியக்காரனாக நிரூபித்த பிறகு ஒரு ராஜாவைப் போல நடத்துவார்கள்.

இந்த ஆண்டு நீங்கள் துடிப்புள்ளவர்களாகவும், அவரோடு இணைந்து செல்கிறவர்களாகவும், ஒரு காற்றைப் போல் அவரை உணர்ந்து சுதந்தரிக்கிறவர்களாகவும் இருக்கும்படி தேவன் சொல்கிறார். நீங்கள் வேகமாக சென்று கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் திடீரென்று நிறுத்த சொல்லி பின் திரும்பி வலது அல்லது இடது புறமாக போகச் சொல்லலாம். அது நீங்கள் பொக்கி'த்தை கண்டுபிடிப்பீர்கள். இந்த வருடம் நம் எல்லாரையும் ஆவியில் நடத்தப்படுதலின் உணர்ச்சியிலும், புரிதலிலும் தேவன் பயன்படுத்துவார் என்று விசுவாசிக்கிறேன். ஒரு ஆச்சரியத்தை அல்லது வித்தியாசமான காரியத்தை எதிர்பாருங்கள். எப்படி பேதுரு நம்பி புறஜாதியாருக்கு மத்தியில் ஊழியத்தை துவங்கினார் அதின் மூலம் தான் நாம்

எல்லாரும் இரட்சிக்கப்பட்டோம். பேதுருவின் சொப்பணத்திற்காய் நன்றி. நிக்கொதேமு ஏதோ ஒன்று கற்றக் கொண்ட போதிலும் அவன் எவ்வளவு தூரம் அதில் இயங்கினான் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்த சம்பவத்தின் மூலம் நாம் புதிதாக ஏதோ ஒன்றைக் கற்றுக் கொண்டோம்.

# உயிர்பிக்கும் சாட்சி

**சகோதரி. சந்தியா பிரகா'ஜ:**



தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

என் பெயர் **சந்தியா பிரகா'ஜ.** என் கணவர் பெயர் பிரகா'ஜ. எனக்கு 11 வயதில் ஒரு மகன் உள்ளான். நான் கடந்த ஐந்து வருடங்களாக நுவநசயெட டுபைாவ யுபு சபைக்கு வருகிறேன்.

**சங்கீதம் 42: 1,2**

1.**மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.**

2. **என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது, நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?**

என்ற வசனத்தில் உள்ளபடி நான் முதலில் சபைக்கு வர ஆரம்பித்த நாட்களில் என் ஆத்துமா ஜீவனுள்ள தேவ வார்த்தைக்காக ஏங்கினது. இங்கு வருவதற்கு முன்பு, இரண்டு வருடம் நல்ல ஆவிக்குரிய சபையைக் காண்பிக்குமாறு ஜெபித்துக் கொண்டிருந்தேன். தாவீது ஜெபித்தது போல தேவ வார்த்தைக்காக என் இருதயம் தாகமாக இருந்தது. தேவன் எங்களுக்கு பதிலளித்து இந்த சபைக்கு அழைத்து வந்தார். இந்த சபைக்கு வந்த முதல் நாளில் இருந்தே பாஸ்டரின் பிரசங்கங்கள் மூலமாக எங்கள் தாகத்தை தணிக்க ஆரம்பித்தார். நானும் என் கணவரும் ஆவிக்குரிய வாழ்க்கையில் தினந்தோறும் வளர்ந்து வருகிறோம். தேவ பிரசன்னத்தை ஒவ்வொரு நிமிடமும் அனுபவிக்கிறோம். எங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு அற்புதத்தை இங்கு சாட்சியாக எழுத விரும்புகிறேன்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு எனக்கு பயங்கரமான வலி வயிற்றுப் பகுதியில் உண்டானது. நான் இது வாயுவினால் உண்டான பிரச்சினை என நினைத்தேன். இதைக் குறித்து இரைப்பை மற்றும் குடற்சிகிச்சை (புயளவசழநவெநசழடழபளைவ) நிபுணரிடம் சென்றேன். பல சோதனைகளுக்குப் பின்பு, இது வாயுபிரச்சினை அல்ல, சினைப்பையில் ஒரு கட்டி உள்ளது (ழஎயசயைெ உலளவ) ,

நீங்கள் ஒரு பெண்நல மருத்துவரைப் பாருங்கள் என்றார்கள். நான் இந்த ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு (பலயெநஉழடழபளைவ)யிடம் சென்றேன். ரடவசய ளழரனெ ளஉயெ செய்து 9 செ.மீ அளவில் ஒரு கேன்சர் கட்டி இருப்பதாக சொன்னார்கள். அந்தக் கட்டி பெரியதாக இருப்பதால் உடனே அறுவை சிகிச்சை செய்து எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் மனமுடைந்து போனேன். தேவனிடம் எனக்கு அறுவை சிகிச்சை இல்லாமல் குணமாக வேண்டுமென்று ஜெபித்தேன். அந்த வார ஞாயிற்றுக் கிழமை என் நிலைமையை பாஸ்டரிடம் சொல்லி ஜெபிக்கக் கேட்டேன். அவர் ஜெபித்து விட்டு உங்களுக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை. நீங்கள் சுகமாவீர்கள். தேவன் சுகப்படுத்துவார் என்றார். அதற்கடுத்த வாரம் நடந்த சனிக்கிழமை இரவு ஜெபத்தில் பாஸ்டர் எனக்காக ஜெபித்து ‘ஆவிக்குரிய செழிப்பு’ என்ற வார்த்தையைக் கொடுத்தார். ஜெபத்திற்குப் பிறகு நான் வீட்டிற்குச் சென்று தேவனிடம் ஆவிக்குரிய செழிப்பைத் தருமாறு ஜெபித்து விட்டு அயர்ந்து தூங்கிவிட்டேன். அதே இரவில் எனக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவு நான் ஜெபிப்பது போலவும், பாஸ்டர் என் தலையில் அவர் கையை வைத்து ஜெபிப்பது போலவும், ஒரு பிரகாசமான ஒளி என் மீது வந்தது. நான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போல உணர்ந்தேன். கனவிலே தேவனைத் துதிக்க ஆரம்பித்தேன். என் இருதயம் இலகுவாய், சந்தோ'மாய் நிறைந்திருந்தது. அடுத்த நாள் அக்கனவை பாஸ்டரிடம் பகிர்ந்து கொண்டேன். அதற்கு அவர் தேவன் உங்களை சுகப்படுத்திவிட்டதை கனவில் உறுதி செய்து விட்டார் என்றார். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அன்றிலிருந்து நான் கவலைப்படுவதை நிறுத்தி விட்டேன். இயேசுவின் நாமத்தினாலே குணமடைந்து விட்டேன் என்று நம்ப ஆரம்பித்தேன். சில நாட்கள் கழித்து திரும்பவும் ஸ்கேன் செய்ய சென்றேன். அந்த மருத்துவர் நீங்கள் எங்கு அறுவைசிகிச்சை செய்தீர்கள்? அந்தக் கேன்சர் கட்டி மறைந்து விட்டதே என்றார். அந்த வார்த்தைகளைக் கேட்டபின்பு, அவர் செய்த மிகப்பெரிய அற்புதத்திற்காக, நான் தேவனை ஆனந்தத்தோடு துதிக்க ஆரம்பித்தேன்.

பாஸ்டர் எப்பொழுதும் சொல்வது போல இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பு மரித்தோரை உயிர்ப்பித்து, நோய்களைச் சுகமாக்கி, குருடரின கண்களைத் திறந்த அதே இயேசு அதே வல்லமையோடு, அதே அதிகாரத்தோடு இன்றும் இருக்கிறார். அதே கிரியைகளை நடப்பிக்கிறார். நாம் நம்ப வேண்டியது ஒன்று மட்டுமே. தேவனாகிய இயேசு கிறிஸ்து இன்றும் அதே போல் அற்புதங்களை செய்கிறார். முதலில் நான் தேவனுக்கு கோடான கோடி நன்றிகளை செலுத்துகிறேன். ஜெபத்திலும், ஆவிக்குரிய சத்தியத்திலும் எங்களைப் போதித்து வழிநடத்தும் பாஸ்டர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் நம் வாழ்க்கைக்கென்று பெரிய திட்டங்களை வைத்துள்ளார் என்று நம்புகிறேன். நானும் என் குடும்பமும் ஏசாயா 61: 3ல் சொல்லி இருக்கிறது போல "அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்". வாழ்ந்து சுகமாயிருப்போம் என்று நம்புகிறேன். தேவனுக்கே சகல துதியும், கனமும் மகிமையும் உண்டாவதாக.

We are now on Facebook, Instagram, Twitter and Youtube

Kindly follow us.

**https://www.youtube.com/eternallightAGchurch**
**https://www.instagram.com/elagchurch**
**https://www.twitter.com/ELAGchurch**
**https://www.facebook.com/ELAGChurch/**

**We welcome your valuable feedback to elagliterature@gmail.com.**

## போதகரை பற்றி



Ps. ஆஸ்வின் ஜேம்ஸ்டட் அவர்கள் ELAG சபையின் தலைமைபோதகர்.

இவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு,தன் செய்திகளின் மூலம் பல ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும், வல்லமையான,அபிஷேகம் பண்ணப்பட்ட தேவமனிதர். இவர்தம் கல்லூரி காலங்களில் இருந்து பகுதிநேரஊழியம் செய்துவந்தார்.

இறையியல் பட்டதாரியான இவர், 1999 முதல் முழுநேரஊழியம் செய்துவருகிறார். தேவஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய வார்த்தைகள் பலர் வாழ்வில் எழுப்புதலையும்,வாழ்வாதாரத்தை உயிர்பித்தும் உள்ளது. தேவஆவியானவரின் அபிஷேகம் நிறைந்த இவருடைய கூட்டங்களில், மக்கள் தொடப்பட்டு,தெய்வீகசுகமும்,விடுதலையும் பெற்றுள்ளனர்.

இவருடைய ஊழியப் பாதையில் உணர்ச்சிபூர்வமான விடுதலை சரீரப்பூர்வமான விடுதலை, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை மற்றும் பில்லி சூனியகட்டுகளிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு நிலைகளில் கர்த்தர் இவரை வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். இவருடைய ஊழியத்தின் நோக்கம் மக்களின் வாழ்வை மாற்றி, அவர்களை முழு விடுதலைக்குள்ளாக நடத்தி, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய அதிகாரத்தை உணரவும் வழி நடத்துகிறது.

கர்த்தர் இவரை இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் மத்தியில் பயன்படுத்தி, அவர்கள் தேவனில் அடுத்த நிலைக்குள்ளாக கடந்து செல்லவும்,தேவனுடைய பிள்ளைகளுக்குண்டான அதிகாரத்தை தங்கள் வாழ்வில் பயன்படுத்தவும் வழிநடத்துகிறார். தேவ இராஜ்ஜியத்தின் மேல் உள்ள இவருடைய பேரார்வம் இவரது செய்திகளில் வெளிப்பட்டு அதை கேட்கும் மக்களின் இருதயங்களில் கர்த்தரின் மேலான பேரார்வத்தைத் தூண்டுகிறது.

## சபையைப் பற்றி

ELAG சபை நான்குபேருடன் 2013ல் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசத்துடன் சிறுகூட்டமாகத் துவங்கினோம். ஆவிக்குரிய அதிகாரத்திலும் வல்லமையிலும் நடக்கிற தேவபிள்ளைகளை உருவாக்கி உலகமெங்கிலும் சுவிஷேசத்தை அறிவித்து, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதே நம்முடைய நோக்கம்.

## புத்தகத்தைப் பற்றி

இந்த புத்தகம் சபையின் இலக்கிய ஊழியக் குழுவால் உருவாக்கப்பட்டது. நமது சபையின் தலைமை போதகரால், ஒவ்வொருவாரமும் ஞாயிற்றுக் கிழமை கொடுக்கப்படும் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரயோஜனத்திற்காக, வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகமானது உங்கள் சரீரவளர்ச்சிக்கும் ஆசிர்வாதத்திற்கும் ஏதுவாக அமையட்டும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.


**Eternal Light AG Church**
Opp. to St.Xavier's School,
2nd Cross, Bettadasanapura road,
Electronic City Phase I,
bengaluru - 560100,
Karnataka, India

**Sunday Services**
English: 9AM Hindi: 5:30PM
Tamil&Kannada: 11:30AM
Mob: 6364066791 / 6364066792
E-mail: ecitycf@gmail.com
Web:www.elagchurch.com